# ஞானம்

## முதலாம் ஆண்டுச் சிறப்பிதழ்



### இந்த இதழில்


- நோய்ப் படுக்கைகளால் எமது புவிக்கோளம்!
- கண்ணில் தெரியும் கதைகள்
- பவள விழாக் கண்ட ஆர்தர். சி. கிளார்க்
- பரிசு பெற்ற சிறுகதை
- நினைவும் வாழ்வும்
- தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்!
- அரச மரத்தின் கதை
- மன ஊனமற்ற மனிதர் (பேட்டி)
- உலகின் தலைசிறந்த கல்விக் கூடங்கள் பத்து
- 'அன்னை இட்ட தீ'
- அண்ட கோளங்களை மனிதன் ஆள்வானா?
- ஆசிரியர் தலையங்கம்
- இன்னும் - வழமையான பல்சுவை விடயங்கள்



இளையோர் திங்கள் இதழ் | செப்ரெம்பர் 1992 | விலை 12 ரூபா

உங்கள் பொதிகளுக்கு
எங்கள் உத்தரவாதம்!

எங்கள் சேவை
என்றும் உங்களுக்கே!

# 'கே-எம்-எஸ். ரான்ஸ்போர்ட்'

பண்டத்தரிப்பு.



இயற்கை மாசுபடல்

# நோய்ப் படுக்கைகளால் எமது புவிக்கோளம். பூமி - எதிர்காலத் தலைமுறைக்கு சாப்பொறி!

**தொ**டக்கத்தில் எல்லாமே சரியாக இருந்தன. பலகோடி ஆண்டுகளாக வளமான மண்ணும், ஊற்றெடுக்கும் நீரும், புத்தம்புதிய காற்றும் எல்லா உயிரினங்கட்கும் தேவையானவற்றை வழங்கின. உயிர் வாழ்க்கைத் தரத்தினைக் கொண்ட மனித நாகரிகத்தின் தொட்டிலாக இப்புவி விளங்கி வந்துள்ளது. ஆனால் இன்று நிலமை மாறிவிட்டது. 550 (5.5 பில்லியன்) கோடியையும் தாண்டிவிட்ட மனிதன் இயற்கையின் தாங்கும் அளவின் எல்லைகளை அணுகிவிட்டான். நச்சுக்காற்றும், மாசடைந்த நீரும் மனித உடலை மட்டுமல்ல. அவன் மனத்தையுமே கெடுத்து விட்டது. பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. அடுத்த 80 ஆண்டுக்குள் தற்போதுள்ள 3 கோடி உயிரினவகையின் (30 Million Species) காற்பங்கு அழிந்துவிடும். ஏதாவது இந்த நிலையில் செய்யப்படாவிட்டால் அடுத்து வரும் தலைமுறைக்கு இப்புவி சாப்பொறிக்கிடங்காகிவிடும்.

எனவே தான் ஐ.நாவின் ஆதரவில் பிரேசிலின் நகரமான றியோடியெனரேரவில் சென்ற யூன் திங்கள் 3-14 திகதிகட்கிடையில் வளர்ச்சிக்கும் சூழலுக்குமான மாநாடு (United Nations Conference on Enviornment and Development) கூட்டப்பட்டிருந்தது. வல்லரசுகட்கிடையிலான மோதல்கள் முடிவடைந்த நிலையில் நாடுகள் சொந்தக் காப்பினை உறுதிப்படுத்தமுனையும் காலகட்டத்தில் இம் மாநாடு வேறோரு காப்பினைப்பற்றி சிந்தித்தது. இப்போதுள்ள முதன்மைச் சிக்கல் அவ்வவ் நாடுகளின் தேசிய காப்பல்ல. இயற்கையின் காப்பே (Not National Security but Natural Security) என்பதே இம்மாநாட்டின் கருவாகும். இரண்டு ஆண்டுகளாக திட்டமிடப்பட்ட இம்மாநாட்டின் முதன்மை இலக்கு சூழல் காப்பிற்கான உலகநாடுகளின் நடவடிக்கைகட்கு வித்திடுவதேயாகும். அத்தோடு பொருளாதார வளர்ச்சிக்கும் சூழல் காப்பிற்கும் இடையில் ஒரு சமநிலையை பேணுவது ஆகும். இதற்காக 700 பக்க 21 நிகழ்ச்சி நிரல் திட்டம் தயாரிக்கப்பட்டது. பலவிதமான இழுபறிகள் ஏற்பட்டாலும் முதன்முறையாக செல்வந்த நாடுகளுக்கும் ஏழைநாடுகளுக்கும் இடையில் முட்டிமோதி விவாதிக்கக் கூடிய ஒரு உயர் நிலை மாநாடாகவும் வளர்ச்சிக்கும் பசுமைக்கும் உள்ள (Growth Vs Green) முரண்பாட்டினை நீக்க வழிதேடும் மாநாடாகவும் இது அமைந்தது.

முக்கியமான அடிப்படைப் பிரச்சினை மாநாட்டின் பெயரேபெரும் விவாதமாகியது. வளர்ச்சிக்கும் சூழல் காப்புக்கும் இடையேயுள்ள பெரும்முரண்பாடு இம்மாநாட்டில் வெளியாகிற்று. ஏற்கெனவே வளர்ச்சியயடைந்த வட அமெரிக்கா, மேற்கைரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய, வடக்கு சூழலை மேலும் மோசமாக்காது காக்க சர்வதேச பொருளாதார வளர்ச்சி வீதத்தை குறைக்கவேண்டும் என வாதிட்டன. அதே சமயம் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை உள்ளடக்கிய, தெற்கு அவ்வாறு குறைத்தால் தங்கள் நாடுகளில் பெருமளவு மக்கள் வறுமைக்கும் பட்டினிக்கும் தள்ளப்பட்டுவிடுவர் என இத்திட்டத்தில் கடுமையாக எதிர்த்தன. அவர்கள் கூற்று இவ்வாறுதான் அமைந்திருந்தது ''நாளை பட்டினியில் சாவதைவிட அடுத்த ஆண்டு சூழல் மாசடைவதால் சாவது மேல் (People would rather die of Pollusion next year than of starvation tomorrow) இதுவரை வடக்கு தான் முன்னேறுவதற்கு பயன்படுத்திய வழிகளை தங்கட்கு இல்லாது செய்வதாக தெற்கு நினைக்கிறது. மலேசிய முதலமைச்சர் மகாதிர் மொகமட் இவ்விடயத்தில் மிகத் தீவிரமாக இருந்தார். வரலாற்று ரீதியாக இன்றைய சூழல் மாசடைந்த நிலைக்கு பெருமளவிற்கு முக்கிய காரணமாக வடக்கு இருப்பதால் அதுவே இதனை சீர்படுத்த ஏற்படும் செலவில் பெரும் பங்கினை பொறுக்க வேண்டும் என்பதே மூன்றாம் உலக நாடுகளின் நிலையாகும். உலகில் மிகப்பெரிய செல்வந்த நாடாகவும், சூழலை மாசடையச் செய்வதிலும் பெரும் வல்லரசாக இருக்கும் அமெரிக்காவிற்கு இவை எல்லாம் பிடிக்கவில்லை ஊருக்கு உபதேசம் உனக்கல்ல என்பதே அவர்கள் நிலை. யார்மாறினாலும் அவர்கள் மாறத்தயாரில்லை. அமெரிக்கா புவிக்கோளம் வெப்பமடைவதற்கு (Global warming)



5992

முதன்மை காரணமாகிய கரிய மிலவாயு வெளியேற்றத்தினை தடுக்க ஒவ்வொரு நாடுகட்கும் இயக்கு நிர்ணயத்தை தடுத்து விட்டது. உலகிலே அமெரிக்காவும், துருக்கியுமே இத்தகைய நிலைப்பாட்டினை எடுத்தது குறிப்பிடத் தக்கது. மேலைத்தேய நாடுகளின் கார்த்தொழிற் சாலைகளே இதற்கு முக்கிய காரணம். ஆனால் வடக்கு – தெற்கு தமது காடுகளை மேலும் அழிக்காது காத்தால்தாங்கள் தொழிற்சாலைகள் மூலம் எவ்வளவு கரியமிலவாயுவையும் வெளியேற்றலாம் எனக் கூறப்பட்டது. அதாவது அவர்கள் மென் மேலும் கைத்தொழில் வளர்ச்சியடைவார்கள். கரியமில வாயுவை கணக்கற்று வெளியேற்றுவார்கள் நாங்கள் காடுகளைக் காத்து அவர்கள் வெளியேற்றும் நச்சுக்காற்றை எமது காடுகள் மூலம் உள்வாங்க வேண்டும். இதற்கு ஏதாவது பிச்சை இடுவது போல் மேற்கத்தைய நாடுகள் ஏதாவது வர்த்தக சலுகைகள், நிதியுதவிகள், கடன்கள் வழங்கும். இதனையே தெற்கு கடுமையாக எதிர்த்தது. நாங்கள் பிச்சை பெறுவதில் போட்டிபோட வரவில்லை. எமது மக்கள் பெரும்பான்மையினரின் நாளாந்த வாழ்வு காடும் - காடுசார்ந்த தொழிலோடும் தொடர்பு பட்டிருக்கின்றது. இதற்கு என்ன மாற்றுவழி என்பதே தெற்கின் நிலைப்பாடு.

அதே போலவே வனவிலங்கு காப்பு உடன்படிக்கையிலும் அமெரிக்கா கைச்சாத்திட மறுத்து விட்டது. அமெரிக்காவின் பெரும் பல்தேசிய நிறுவனங்கள் பாதிக்கப்படும் என்பதோடு அடுத்த தேர்தலில் தான் வெல்லவேண்டும் என்ற கவலையும் சனாதிபதி புஷ்சுக்கு இருந்தன.

இவ்வாறான அப்பட்டமான சுயநலப் போக்குகட்கிடையில் ஏதோவகையில் உடன்பாடுகாணப்பட்டு மாநாடு முடிவுற்றது. மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை பார்த்தால் அச்சத்திற்கான நோயாளியாக மாறிய காரணம் புரியும். எமது புவிக்கோள் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்கும். இனிவரும் எதிர்கால தலைமுறை ஆரோக்கியமாக வாழ முடியுமா என்பதே கேள்வி. இக்கேள்விக்கு யார் பதில் தருவார். மனிதன் இயற்கைக்கு செய்யும் அழிவு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

## வியப்பூட்டும் புள்ளி விபரங்கள்

1) இன்றையதினம் உலகில் மொத்தம் 600 மில்லியன் (60 கோடி) வாகனங்கள் உள்ளன. (இவற்றில் 480மில்லியன் கார்கள்) இவை வெளியேற்றும் நச்சுப்புகை, மின் நிலையங்கள், தொழிற்சாலைகள், நிலக்கரி, மரம் போன்றவை எரிக்கப்படுவதால் வெளியேற்றப்படும் நச்சுப்புகைகள் காற்றில் கலந்து நீரழிவு, ஆஸ்த்துமா, புற்றுநோயை உருவாக்குகின்றன. நீருற்றுக்கள், ஏரிகள் அமிலமடைந்து மனித வாழ்வினை பராமரிக்க முடியாமல் போகின்றன.

2) தொழிற்சாலைகள் மட்டும் ஆண்டு தோறும் 2 பில்லியன் தொன் (200 கோடி) திண்மக் (Solid) கழிவுகளையும் 330 மில்லியன் தொன் (33கோடி) நச்சு கழிவுகளையும் வெளியேற்றுகின்றன. இவற்றினை விட குப்பைகூளங்களும், கழிவுநீர் போன்றவையும் சேர்த்து நிலத்தடி நீருக்குள் கலந்து பலவிதமான தொற்று நோய்கள் உருவாகுகின்றன. உலக மக்களின் முதன்மையான குடிநீர் நிலத்தடி நீரேயாகும். இதனால் நாளாந்தம் 25,000 (25 ஆயிரம்) பேர் மூன்றாம் உலக நாடுகளில் இறக்கின்றார்கள்.

3) விறகிற்காகவும், மரத்தேவைக்காவும், விவசாய நிலங்களுக்காகவும் ஆண்டு தோறும் 16. மில்லியன் கெக்டயர் காடுகள் அழிக்கப்படுகின்றன.இதன்மூலம் ஆண்டு தோறும் 25 மில்லியன் தொன் செழிப்பான விவசாயம் செய்யக்கூடிய மண் அரித்துச் செல்லப்படுவதோடு வெள்ளப் பெருக்கு, மண் சரிவுகள் ஏற்படுகின்றன. அத்தோடு உலகின் தாவர, வனவிலங்கு வகைகளின் அரைப்பங்கு பெரும் ஆபத்துக்குள்ளாகின்றன (1கெக்டயர்-2.5 ஏக்கர்)

4) பல்வேறு வழிகளாலும் வெளியேற்றப்படும் வாயுக்கள் புவியின் மேற்பரப்பில் போர்வையாக மாறி சூரிய வெப்பத்தை உள்வாங்குவதால் புவிக்கோளம் மேலும் வெப்பமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது 2250 ஆண்டளவில் புவியின் வெப்பம் 10° சென்றிகிரேட்டால் அதிகரிக்கும் எனவும், 4-6 மீற்றர் வரை கடல்மட்டம் உயரும் எனவும், இதனால் பல்லாயிரக் கணக்கானோர் வாழ்விடங்கள் பாதிக்கப்படும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

5) இது புவிக்கோளத்தைச்சுற்றியுள்ள ஓசோன் வாயுப்படை சூரியனின் தீங்கான ஒளிக்கதிர்களை (Ultraviolet Light)மனிதனை அணுகாமல் தடுக்கின்றன இல்லாவிட்டால் மனிதனுக்கு தோற் புற்றுநோய் (Skin Cance) கண் நோய் (Eye Catara) ஏற்படுவதோடு கடல் வாழ் உயிரினங்களும் பெருமளவு தாக்கப்படும். ஆனால் குளிர்பதனக் கருவி, காற்று சீராக்கும் கருவி (Air Conditioner) பலவகை நிறக்கலவைகள், மணமூட்டும் திரவங்கள் (Aerosol Spray Cans)தீயணைப்புக் கருவிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் செயற்கை இரசாயனங்கள், இவ் ஒசோன் படையினை மென்மையாக்கி அவற்றுள் துளைகளை ஏற்படுத்தக் கூடியனவாகின்றன. புவிமேற்பரப்பிற்கு 60கிலோ மீற்றர் தொலைவு வரை இப்படியான துளைகள் ஏற்படப்போகின்றன.

இவையாவற்றையும் சேர்த்துப் பார்க்கும் போது மேற்குலகம் புவியை ஒரு பெரிய குப்பைக் கூடையாக்கி விட்டது. என்றே சொல்லத் தோன்றுகின்றது.

- பாலகுமார்

ஒரு கணநேர சிந்தனை ஒரு மணி நேரப் பேச்சிற்கு சமம்!

–தோமஸ் ஹுட்

## காலமும் கவிதையும்

பல ஆண்டுகளுக்கு முன்பு காலஞ்சென்ற கவிஞர் கண்ணதாசன் அவர்களை மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ் மன்றம் 'காலமும் கவிதையும்' என்ற தலைப்பில் பேசுவதற்கு அழைத்திருந்தது. அதே தலைப்பில் கவிதை பாடுவதற்கும் கவிஞர் ஒப்புக்கொண்டிருந்தார். அந்த நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள் சிலரும் தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்ய இருந்தனர்.

கல்லூரி நிகழ்ச்சிக்கு வந்து சேர்ந்த கவிஞர் கவியரங்கில் பங்கு கொள்ள வந்திருந்த மாணவர் ஒருவரை அழைத்து ''உங்கள் கவிதையை என்னிடம் கொடுங்கள் நான் அதைப்படிக்கிறேன். நீங்கள் என் கவிதையைப் படியுங்கள். ரசனை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்'' என்று இரகசியமாகக் கூற அந்த மாணவரும் ஒப்புக் கொண்டார்.

முதலில் அந்த மாணவர் கவிஞர் எழுதிய கவிதையைத் தான் எழுதியது போலவே படித்தார். கைத்தட்டல் எதுவும் கிடைக்கவில்லை. இறுதியில் மாணவர் எழுதிய கவிதையை கவிஞர் படித்தார் கைத்தட்டல் குவிந்தது. வரிக்கு வரி கைத்தட்டல் பலமானது. கவிஞர் தனது உரையைத் தொடங்கியபோது, உண்மையை எடுத்துரைத்தார். பிறகு, ''இந்தக் காலத்தில் யாருடைய வாயிலிருந்து கவிதை வருகிறது என்று பார்த்துத் தான் வரவேற்கிறார்கள். இதுதான் 'காலமும் கவிதையும்'" என்று தமது சொற்பொழிவுத் தலைப்பிற்கு ஏற்ற தொடக்கமாக அந் நிகழ்ச்சியை அமைத்தார்.

### 'இருந்து பாடிய இரங்கற்பா'

தேனார்செந் தமிழ முதைத்
திகட்டாமல் செய்தவன் மெய்
தீயில் வேக
போனாற்போ கட்டுமெனப்
பொழிந்ததிரு வாய்தீயிற்
புகைந்து போக
மானார்தம் முத்தமொடும்
மதுக் கோப்பை மாந்தியவன்
மறைந்து போக
தானே எந் தமிழினி மேல்
தடம் பார்த்துப் போகுமிடம்
தனிமை தானே!

—இது கவிஞர் கண்ணதாசன் இறப்பிற்காகப் பாடப்பட்ட இரங்கற்பாவின் ஒரு பகுதி. இதைப் பாடியவரும் கண்ணதாசன் தான்! ஆமாம் - தான் இறப்பெய்தி விட்டால் நண்பர்கள் உறவினர்கள் எப்படியெல்லாம் கலங்கிக் கண்ணீர் விடுவார்கள் என்பதைக் கற்பனை செய்து கையறு நிலைக்கவிதை ஒன்றைத் தீட்டினார் கவிஞர். 'இருந்து பாடிய இரங்கற்பா' என்ற அந்தக்கவிதையின் ஒரு பகுதி தான் இது.

## நெப்போலியன் நீதிக்கோவை

1802 ஆம் ஆண்டு நெப்போலியன் பிரதம அமைச்சர் பதவியைப் பெற்றதும் பிரான்சில் பல்வேறு உள்நாட்டுச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவற்றுள் அவர் பிரதானமாகக் கவனம் செலுத்தியது சட்டம் - நீதி என்பவற்றிலாகும்.

பிரான்சின் நீதித்துறை மிகவும் சீரற்று இருந்தது. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகளுக்கேற்ப ஏற்றத் தாழ்வான சட்டங்கள் காணப்பட்டன. சட்டங்களில் ஒரு பொதுத் தன்மையோ ஒழுங்கோ இருக்கவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகளை நியாய பூர்வமான முறையிற் தீர்க்கக் கூடிய வகையிலான சட்டங்கள் காணப்படவில்லை.

இந்நிலையில் நெப்போலியன் ஒரு புதிய நீதிக் கோவையை உருவாக்குவதற்கென ஒரு திறமைசாலிகள் குழுவினை நியமித்து அதனை நேரடியாகக் கண்காணித்தார். இக்குழு பிரான்சிலும் பிரான்சிற்கு வெளியிலேயும் அக்காலத்திற் காணப்பட்ட சட்டங்களைச் சேகரித்தது. சேகரிக்கப்பட்ட சட்டங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு தொகுக்கப்பட்டன. பல புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

தேர்ந்து தொகுக்கப்பட்ட சட்டங்களும் புதிதாக உருவாக்கப்பட்ட சட்டங்களுமாக இணைத்து ஒரு புதிய சட்ட - நீதிக்கோவை உருவாக்கப்பட்டது. நெப்போலியன் இதில் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டு தொகுக்கப்பட்ட சட்டங்களை தானே பரிசீலித்தும் வந்தார். இறுதியாக 1804 ஆம் ஆண்டு நெப்போலியன் நீதிக்கோவை வெளியிடப்பட்டது.

சிவில் சட்டம், குற்றவியல் சட்டம், வர்த்தகச் சட்டம் என இவரது நீதிக்

(06 ஆம் பக்கம் பார்க்க)

(சிரிப்பதற்கு மட்டும்)

# மாய மந்திரம் கற்றவன்

ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு முந்திரிப்பருப்புப் பாயாசம் என்றால் உயிர்.

மனைவியைப்பார்த்து "நாளை எனக்குப் பிறந்த நாள் எனக்குப்பிடித்த பாயாசம் செய், அதில் முந்திரிப்பருப்புப் போட வேண்டும்" என்றான்.

"காலையில் எழுந்ததும் சாடியிலிருந்து எவ்வளவு முந்திரிப்பருப்பு தேவையோ அவ்வளவு எடுத்துத்தாருங்கள். நான் செய்து வைக்கிறேன்" என்றாள் மனைவி.

மறுநாள் அவன் சாடியை எடுத்தான். அதன் வாய், உள்ளே கைவிடும் அளவிற்குத்தான் இருந்தது. அதனுள் கைவிட்ட அவன் ஒரு கைப்பிடி முந்திரிப்பருப்பை அள்ளிக் கொண்டான். கைகளை வெளியே எடுக்க முயன்றான் அவனால் முடியவில்லை.

உடனே தன்மனைவியை அழைத்து கைகளை எடுக்க உதவுமாறு கத்தினான். கணவனின் குரலைக்கேட்ட அவள் ஓடிவந்தாள். சாடிக்குள் சிக்கிக் கொண்ட அவன் கைகளை விடுவிக்க முயன்றாள், முடியவில்லை.

"ஐயோ யாராவது வந்து என் கணவனைக் காப்பாற்றுங்கள்" என்று கூச்சலிட்டாள். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் அங்கே வந்து கூடிவிட்டனர்.

என்னசெய்வது என்று சிந்தித்த அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். சிலர் அவனைப் பிடித்துக் கொண்டனர். சிலர் சாடியைப் பிடித்துக் கொண்டு இரண்டு பக்கமும் இழுக்கத் தொடங்கினர்.

"ஐயோ என்னை விட்டு விடுங்கள் வலி பொறுக்க முடியவில்லை" என்று அலறினான் அவன். வேறுவழியின்றி அவர்கள் இழுப்பதை நிறுத்தினார்கள். யாருக்கும் இப்பொழுது என்ன செய்வது என்று தெரியவில்லை. காரணம் அந்த ஊரிலுள்ள அனைவரும் முட்டாள்கள்.

நடந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் வெளியூர்க்காரன் ஒருவன்.

"நான் சொல்கிறபடி நீ செய்வதாக இருந்தால் சிக்கிக்கொண்டிருக்கும் உன்கையை சாடிக்குள்ளிருந்து விடுவிக்கிறேன்" என்றான் அவன்.

"என் கை விடுபட்டால் போதும். நீ என்ன சொன்னாலும் செய்கிறேன்" என்றான் உழவன்.

"சாடிக்குள் உன்கையை மேலும் உள்ளே விடு" என்றான்.

வியப்படைந்த உழவனும் அப்படியே சாடியின் அடிப்பகுதியை தொடுமளவு கையை விட்டான்.

"கையில் இருக்கும் முந்திரிப்பருப்பை சாடிக்குள் போட்டுவிடு" என்றான்.

உழவனும் அப்படியே செய்தான்.

"இப்பொழுது உன் கையை மெதுவாக வெளியே இழு" என்றான்.

உழவன் அப்படியே செய்ய சாடிக்கு வெளியே அவனது கை எளிதாக வந்துவிட்டது.

"ஐயா, நீங்கள் சொன்னபடி செய்தேன் கை வெளியே வந்துவிட்டது. சாடிக்குள்ளிருக்கும் முந்திரிப்பருபபை எப்படி எடுப்பது?" என்று கேட்டான் உழவன்.

"சாடியை கவிழ்த்துவிடு" என்றான் அவன். சாடிக்குள்ளிருந்த முந்திரிப்பருப்பு முழுமையும் தரையில் கொட்டியது.

"உனக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு மீதியைச் சாடிக்குள் போட்டுவிடு" என்று விளக்கினான்.

எல்லாவற்றையும் பார்த்து வியப்படைந்த உழவன் "நீ என்ன மாயமந்திரம் கற்றவனா? நம்ப இயலாத செயல்களை எல்லாம் மிக எளிதாகச் செய்கிறாயே" என்று சொன்னான்.

# கொலை

**மணலாறு விஜயன்**

"இந்துஜா... இதுயாரம்மா...?"


"மாமா......"

"இது......?"

"அம்மாச்சி"

"இது......?"

"..........."



இந்துஜா மௌனமாக இருந்தாள். துண்டிக்கப்பட்ட தன் கையையும், புகைப்படத்தையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"இந்து..... இது யாரம்மா...?" திரும்பவும் அதே படத்தைக் காட்டி, கேள்வியில் அழுத்தம் கொடுத்துக் கேட்டேன்.

இமைக்க மறந்து எங்கேயோ வெறித்து நோக்கினாள்.

எட்டு வயது நிறையவில்லை, அவளது எதிர்காலம் ....? முடிந்து போன அந்தக் கொலை கண்ணில் அப்படியே தெரிந்தது.

வற்றாப்பளை அம்மன் கோயிலின் கோபுரங்களும், மாடங்களும், குண்டு வீச்சில் இடிந்து கிடந்தது.

ஆனால் மக்கள் அவள் மீது இன்னும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தனர். அதன் பிரதிபலிப்பே இவ்வருடமும் அவளுக்கு பொங்கல்.........

தடைப்பிரதேசம். மனித நடமாட்டம் கண்டால் முல்லைத்தீவு சிங்களப் படை முகாமிலிருந்து செல்வந்து விழும். ஆனாலும் பொங்கல் இவ்வருடமும் தொடங்கியது. பாழடைந்த இடிபாடுகள் மனதில் ஒருவித பய உணர்வை கொடுத்தாலும் பொங்கல் ஆரவாரத்தில் அதை எல்லோரும் மறந்திருந்தனர்.

"விளக்கெரிக்க தீர்த்தம் எடுக்கேக்க செல் அடிச்சவன் ஏன் பொங்கலுக்கு அடிக்கமாட்டான்"

"வருசா வருசம் பொங்கலெண்டு அவனுக்கு தெரியும்தான், அவன் அடிக்கமாட்டான்."

"பேக்கதையல்ல கதைக்கிறியள் உதல்லாம் அவன் இப்ப பார்க்கிறேல்ல; ஏன் இந்தமுறை பொங்கல் கொண்டாடாட்டர் என்ன வந்தது."

"இல்லைப்பாரும், செஞ்சிலுவைச் சங்கம் பொங்கலுக்கு அனுமதி எடுத்ததாம்,"

"அனுமதி எடுத்தா அடிக்க மாட்டான்தானே"

இப்படி பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். எனதுமனம் செல் அடிப்பான் என்றே கூறியது. ஆனாலும் போன வருடமும் பொங்கலுக்கு போகாதது மனதைக் குடைந்தது. அதனால் அதிகாலையிலேயே குளித்துவிட்டு மனைவி பிள்ளைகளுடன் கோயிலுக்குப் புறப்பட்டேன். கோயிலடிக்குச் சென்றதும் மனதில் ஒரு திருப்தி ஏற்பட்டது. ஒரு புறத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனமொன்று கொடியைப் பறக்கவிட்டவாறு நின்றது. காவடிகள் கூட்டங்கூட்டமாக ஆடி கோயிலை வலம்வந்து கொண்டிருந்தன. நந்திக் கடலின் மறு கரையில் சிங்களப் படைமுகாமின் காப்பரண்கள் தெளிவாகத் தெரிந்தன. வேகமாகச் சென்று அம்பாளைத் தரிசித்துவிட்டு கோயிலுக்கு சற்று தொலைவில் மர நிழலில் வந்து அமர்ந்தேன்.

"அப்பா கடலைக் கொட்டை வாங்கிக் கொண்டு வரவேணும், காசு தாருங்கோ" பிள்ளைகள் தொல்லை கொடுத்தார்கள். காசினைக் கொடுத்து அவர்களை அனுப்பும்போது, "செல் அடிச்சா ஓடாமல் விழுந்து படுத்திட வேணும்" என அவர்களிடம் வலியுறுத்தினேன். சில நிமிடங்களில் கடலையுடன் அவர்கள் திரும்பினர்.

## கண்ணில் தெரியும் கதைகள்

கடலை வாங்குவதும், அம்மம் மாக் குழல் வாங்குவதும்' ஐஸ்ப ழம் குடிப்பதும்தானே அவர்களின் பொங்கல்! உழவியந்திரத்தில் தூக் குக்காவடியொன்று வந்து கொண் டிருந்தது. தூக்குக்காவடியின் துலாவில்இருவர் நின்று காவடியை ஆட்டிக் கொண்டு நின்றார்கள் காவடிக்குப் பின்னே பெருந்திர ளான பக்தர்கள் வந்து கொண் டிருந்தார்கள்.

காவடிகள் ...... கற்பூரச்சட்டி கள்...... மேளங்களின் அகோர அடி......

நேரம் அதிகமாக அதிகமாக மக்கள் வரும் தொகையும் அதி கரிக்கத் தொடங்கியது.

திடீரென ஒரு முழக்கம்.

மக்கள் திசைமாறி ஓடினார்கள். பெரும் மக்கள் கூட்டம் செஞ்சிலு வைச்சங்க வாகனத்தைச் சுற்றிக் கூடியது. இரண்டாவது செல் வாக னத்தை அண்டியதாக வீழ்ந்து வெடித்தது. எங்கும் ஒரே அவலக் குரல் செஞ்சிலுவைச் சங்க வாக னத்தின் ரயர்கள் செல்த்துண்டுக ளால் சிதறியது. அதிலிருந்தவர் களது கதியைப் பார்க்க யாருக்கும் நேரமில்லை. அடுத்த செல் விழு வதற்குள் ஓடித்தப்ப வேண்டு மென்ற எண்ணம். ஓடினார்கள். ஐந்நூறு யார் தூரம் அனைவரும் ஓடியிருப்பார்கள். அடுத்த செல் மக்கள் சென்ற திசையில் சரியாக வந்து வீழ்ந்து வெடித்தது. அழு கைக்குரல் வானைப் பிளந்தது. சில நிமிடத்தில் ஆலயப் பிரதேசத் தில் எவரும் இல்லை. தூக்குக் காவடியின் செடில் முள்ளில் சதை மட்டும் தூங்கிக்கொண்டிருந்தது. காவடி இன்றி செடிலோடு ஓடி யவர்கள் ஒருபுறம், காவடிகள் ஒரு புறம். குழந்தைகளை விட்டு ஓடிய தாய்மார் ஒருபுறம். ஆலயவீதி எங்கும் சிதறிசகிடந்த உடல்கள்... அனாதையாகக் கிடந்த குழந்தை கள் ...... எழுதமுடியாத, சொல் லில் விளக்கிடமுடியாத கோர நிகழ்வு. துணிந்தசிலர் சில வாக னங்களுடன் ஆலயவீதிக்கு விரைந்து வந்தனர். யாரைத்தூக் குவது ...... யாரை விடுவது......

அங்கே சயிக்கிளின் அருகில் ...... ஆம். கணவன் .. மனைவி பிள் ளைகள் ......

ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து ...

இந்துஜாவும், தாயும் உயிருக் காகப் போராடிக் கொண்டிருந் தனர். அவளது தங்கையும், தந் தையும் இரத்த வெள்ளத்துள் அங்கப் பிரதட்சணை செய்து ஆலய தரிசனத்தை முடித்துக் கிடந்தனர்.

கால்கள் சிதறியநிலையில் சதை யும் தோலும் தொங்க பலரை தூக்கி ஏற்றிக் கொண்டிருந்தனர்.

இருபதுக்குமேல் சிதறிய உடல் கள்.......

நாற்பதுக்கு மேல் உணர்வற்ற உயிர்கள்.

கொலை!

சிங்கள அரசின் திட்டமிட்ட படு கொலை!

கடவுள் சந்நிதானத்தை மறந்த கொலை. புத்ததர்மம் புதைகுழி யில் புதைக்கப்பட்ட கொலை.

தந்தையும், தாயும் நின்ற அந் தப் புகைப்படத்தை இந்துஜா வுக்கு திரும்பவும் காட்டி "இது யாரம்மா?"

"............"

அவளின் பிஞ்சு உதடுகள் அசைந் தன. ஆனால் வார்த்தைகள் வெளி வரவில்லை.

அகல விரிந்த கண்முன்னே கட் டுப்போட்ட தன் மொட்டைக் கையைத் தூக்கிப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

பெருமூச்சுடன் அந்த புகைப்பட சேர்ப்புப் புத்தகத்தை மூடினேன் ●

## நெப்போலியனின் நீதிக்கோவை...

(3ஆம் பக்கத் தொடர்)

கோவை மூன்றுபெரும் பிரதானபிரிவுகளைக் கொண்டிருந்தது. சொத்துக்களை வைத்திருத்தல், சொத்துக்களைக் கைமாற்றல், சொத்துக்களைப் பராமரித்தல் விடயத்தில் நெப்போலியனது சிவில் சட்டங்கள் இன்றும் தனி முக்கியத்துவம் வாய்ந்தவையாய் இருந்து வருகின்றன. குற்றவியல் சட்டமும் இன்று வரை அதன் அச்சுக் குலையாமல் நடைமுறையில் இருந்து வருகின்றது. வர்த் தகச் சட்டத்தில் பிற்காலத்தில் சில விரிவாக்கங்கள் செய்யப் பட்டுள்ளன. ஆனால் நெப்போலியனது சட்டக் கோவையில் ஒரே ஒருஇடத்தில் தான் பிரதானமாக காலத்திற்கு ஒவ்வாதது என்று ஒரு பிறழ்ச்சிஏற்பட்டுள்ளது.

அதாவது கணவன் இறந்து 11ஆவது மாதத்திற் பிறக்கும் ஒரு குழந்தைக்கு அவரது பெயரிற் பிள்ளைப்பதிவு செய்ய முடியாது என்றொருசட்டம் கோவையில் உண்டு. ஆனால் இன்றுதொழில் நுட்ப வளர்ச்சியினால் ஆணின் விந்தினை ஏற்கனவே எடுத்து குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்துப்பேணமுடியும் என்பதால் கணவன் இறந்து பல வருடங்களின் பின்பும் கூட அவ்விந்தி னைக் கொண்டு மனைவி கருத்தரிக்க முடியும். 1989ஆம் ஆண்டு பிரான்சில் இது தொடர்பாக ஒரு பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

நெப்போலியனது சட்டங்களை வேறு பல ஐரோப்பிய நாடுகளும் பின்பற்றி வருகின்றன. அத்துடன் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளும் இவரது சட்டக் கோவையை கருத்திற் கொண்டு தமது சட்டங்களை உருவாக்கியுள்ளன.

நெப்போலியனை இன்றும் இப் பூமியில் உயிர்த்துடிப்புடன் நிலைநிறுத்தியுள்ளது அவனது நீதிக் கோவையே.

# பவளவிழாக் கண்ட ஆர்தர் சி. கிளார்க்

அறிவியல் புனைகதை எழுத்தாளரும் விண் வெளித்தீர்க்கதரிசியுமாகிய ஆர்தர் சி. கிளார்க் சிறிலங் காவில் 1956ல் இருந்து வசித்து வருகிறார். இவர் ஒரு ஆங்கிலேயர். இவர் பிறந்தது இங்கிலாந்தில் உள்ள சொமசெற் என்னும் இடத்தில் இருக்கும் மைன்கெட் ஆகும். தனது பிறந்தநாளை யூலை 17 இல் கொண் டாடும் ஆர்தர் சி. கிளார்க் உண்மையில் 1917 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17ம் நாள் பிறந்தார். இவ ரது சொந்த ஊரான மைன்கெட்டில் இவரது பிறந்த நாள் கடந்த மாதம் கொண்டாடப்பட்டது. உலகின் வெவ்வேறு பாகங்களிலிருந்தும் பலதுறைசார்ந்த பெருந்தகைகள், அறிவியலாளர், எழுத்தாளர்கள் விண் வெளி ஆர்வலர்கள், இவரின் விசிறிகள் எல்லோரும் கூடி இருந்தனர். அவரது படைப்புக்களைக் கொண்ட பொருட்காட்சியும் நடைபெற்றது. இக்கொண்டாட் டத்தின் போது நீல்மைக்லீர் எழுதிய டாக்டர் கிளார்க்கின் வரலாறும் வெளியிடப்பட்டது.

1948 இல் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் முதல் வகுப்பில் அறிவியல் பட்டதாரியாகத் தேறிய கிளார்க் 75 நூல்க ளையும் 500க்கு மேற்பட்ட அறிவியல் கட்டுரைகள், சிறு கதைகள் ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.

பூமிக்குமேல் 14,000 கல் தொலைவில் நிலையாக வைக்கப்பட்டிருக்கும் துணைக்கோளிலிருந்து பூமியின் எந்தவொரு இலக்குடனும் தொடர்பு கொள்ள முடியும் என்ற கருவை உருவாக்கியவர் ஆர்தர் சி. கிளார்க். இக் கோட்பாட்டை தான் கல்விகற்கும் காலத்திலேயே 1945ம் ஆண்டு ஐப்பசி மாத வயர்லஸ்வேல்ட் (Wireless world) என்னும் இதழில் வெளியிட்டார். இதன் மூலம் நவீன தொலை தொடர்புகளுக்கு அத்தி வாரமிட உதவினார்.

தற்போது அவர், 'பூகோள கிராமத்திற்கு அப்பால் உலகம் எப்படி ஒன்றாக இருக்கின்றது' (How the world was one: Beyond the global village) என்ற தனது நூலில் தொலைதொடர்புகளின் முழுவரலாற் றையும் தொகுத்துள்ளார். ஆழ்கடலில் நீர்மூழ்கிக் கப்பல்களில் உள்ள தந்திக்கம்பிகளுடன் தொடங்கி, பைபர் ஒப்ரிக்ஸ் தொலைத் தொடர்புத் துணைக் கோள்கள் ஆகியவற்றின் வளர்ச்சி முதலியவற்றையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நியூரினோ (Neutrino), கிறேவிற்றேசனல் (Gravitational) இரச்சியன் (Tachyon-ஒளியிலும் வேகம் கூடிய) தொலைதொடர்புகள் பற்றி யும் விபரிக்கின்றார்.

இந்நூலில் அவர் மேலும் கூறுகிறார் 'மின்னியல் பிறந்த இந்நூற்றாண்டு முடியும் தறுவாயில், தொலை தொடர்புத்துறையில் நாம் விரும்பிய அனேகமாக எல் லாவற்றையும் தொழில்நுட்ப ரீதியாக சாதிக்கக்கூடிய தாயிருக்கிறது. அவற்றை நீதி, சட்டம் அல்லது அர சியல் காரணிகள் மாத்திரம கட்டுப்படுத்துகின்றன'' மேலும் அவர் நாம் உண்மையில் தொலைத் தொடர் புகள் தொழில்நுட்பத்தின் எல்லைகளை தொட்டு விட்டோமா? மனிதர்கள் இனியும் கண்டுபிடிக்க ஒன் றுமே இல்லை என்று கூறும் கூற்று பிழையானது என எப்பொழுதும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் கூறு கிறார்

### சர்வதேச விண்வெளி பல்கலைக்கழக வேந்தர்

ஆர்தர் சி. கிளார்க் விண்வெளி சம்பந்தமான திரைக்கதைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய ''2001 - விண்வெளி பெருங்காவியம்'' (2001 - A Space Odyssey) என்ற விண்வெளி சம்பந்தப்பட்ட தீரச் செயல்களை உள்ளடக்கிய திரைக்கதைக்கு ஒஸ்கார் விருதுவழங்கப்பட்டு இவர் கௌரவிக்கப் பட்டுள்ளார். அது மாத்திரமல்ல உலகளா விய ரீதியில் பல கௌரவங் களையும் விருதுகளையும் பெற்றிருக்கிறார். பல இலக் கிய, அறிவியல் கலாநிதிப் பட்டங்களுடன், பிராங்லின் கழகத் தங்கப் பதக்கம், மார்க்கோணி உறுப்புரிமை சாரிஸ் ஏ. லிண்ட் பேர்க் விருது யுனெஸ்கோ காலிங் கப் பரிசு போன்றவையையும் பெற்றுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கம் கிளார்க்கைக் கௌரவித்து அரசாங்கத்தினால் நிறுவப்பட்டிருக்கும் நவீன தொழில் நுட்பங்களுக்கான ஆர்தர் கிளார்க் மையம் அமைந் திருக்கும் கொழும்புக்கு அருகேயுள்ள மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக நியமித்துள்ளது. அவர் சர்வதேச விண்வெளி பல்கலைக்கழகத்தின் வேந்தருமாவார்.

தொலைத்தொடர்பு விண்கோள்கள் பற்றி கிளார்க் குறிப்பிடுகையில் சமீபத்தில் நடந்த வளை குடாப் போர்க்காலத்தில் முதன் முதலாக ஐக்கிய அமெரிக்கா போரையும் அதிலும் முக்கியமாக அதன் பின் விளைவுகளையும் உடனுக்குடனும் நேரடியாக வும் பார்க்கக் கூடியதாகவிருந்தது என்றும் குறிப்பிடு கிறார். வியட்னாம் போர்லண்ட் போர்களின்போது விண்கோள்கள் மூலம் தொலைத் தொடர்புகள் பெறக் கூடிய வளர்ச்சிகள் இருக்கவில்லை அப்போது நடந்த வற்றை மக்கள் புகைப்படங்கள் வீடியோப்படங்கள் மூலம் பார்க்கும்போது நடந்துமுடிந்தவை வரலாறு ஆகிவிடும் ஆனால் வளைகுடாப்போர் நடந்தபோது துணைக்கோள்கள் தொலைத்தொடர்புகளின் வளர்ச்சி

(18ஆம் பக்கம் பார்க்க)

'பான்சி குட்ஸ்'
'எவர்சில்வர்' பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தும் -
நியாய விலையில் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்

**விஷ்ணு கரன்ஸ்**
சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

நம்பிக்கை • நாணயம் - தரம்

உங்கள் தேவைக்கேற்ப
எங்கள் சேவை.

- நெல் உடைத்தல்
- மாவு அரைத்தல்
- தூள் அரைத்தல்

அனைத்தும் ஒரே இடத்தில்

**வினாயகர் கிறைன்டிங் மில்**
அளவெட்டி.

சாளரம் சிறுகதைப் போட்டியில்
1ம் பரிசு பெற்ற சிறுகதை

# திரிசங்கு சொர்க்கத்தில் ஆசிரியர்

பெ. கணேசன்

பனிபடர்ந்திருந்த செடிகளில் கால்கள் பட சில்லென்று உதைத்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பனிப்படலம் சாம்பல் மேடாகக் குவிந்து அயல் வீடுகளையும் தென்னஞ் சோலைகளையும் மறைத்து நின்றது. அதிகாலை ஐந்து மணியிருக்கும் "ஏ... கெய் ஏ ......கெய்" எங்கோ ஒரு குரல் கேட்டுக் கொண்டேயிருந்தது. நான் சைக்கிளை உழக்குகிறேன். மணற்பாதையாதலால் சைக்கிள் சுழித்து சுழித்து நின்றுவிட மனம் சோர்ந்துபோய் இறங்கி விடுகிறேன். கால்களில் புல்லின் ஓரங்கள் வருடியது. மணல் வீதியிலே பனித் துளிகள் தோய்ந்த தடங்கள் பிட்டுக்கு குழைத்த அரிசிமாவைப்போல பட்டும் படாமலும் ஈரமாக இருந்தன.

மணிக்கூட்டைத் திருப்புகிறேன். இன்னும் கிழக்கின் திசையை உணர முடியாத நிலை. கடவாணை தாண்டி முன்னேறும் நீரின் 'குளக் புளக்' எனற ஓசை என் காதில் விழுகிறது.

'ம்... அநியாயமா குளத்துத் தண்ணி பாயுது' என்மனதுள் ஒரு வகை வேதனை,

இந்தமுறை சிறுபோகத்திற்கு என்ன செய்யப் போறம். மழை பிழைச்சதால காலபோகத்திற்காக குளத்துத் தண்ணீர் செலவழியுது.

சிறிய தென்றல் என் மேனியைத் தழுவ சுய நினைவிற்கு வருகிறேன்.

"ஏ... கெய் ஏ......கெய்" யாரோ ஒருவன் சின்னக் குரலில் பன்றி துரத்துகிறான்.

பாடசாலை மாணவனாகத்தான் இருக்கும். மெல்லிய குரலாய்த் தானிருக்கு. என்னட்ட படிக்கிறவனாத்தானிருக்கும். பலரின் முகம் கண்ணுள் தோன்றுகிறது. பனிப்புகை வாய்க்கால் நீரின் மேல் சீண்டி விளையாடுகிறது. தனியாக நிற்கும் பன் புல் ஒன்று நீரோட்டத்தின் அசைப்பில் கிடுகிடு என நடுங்கிக் கொண்டிருக்கிறது. சற்றுப் பின்னால் கால்வாய் கரையோடு அண்டி நிற்கும் பன்புற் கூட்டம் அதனை ரசிப்பதைப்போல தலையசைக்கின்றன.

குண்டு ஒன்று வெடிக்கும் சத்தத்தை ஒரு காதுவாங்க மறுகாது விட்டுக் கொள்கிறது. பாதைச் சந்தியை அடைகிறது. பனிக்கு தலையை மூடிக்கட்டிக் கொண்டு சாறத்தை அணிந்த மாணவன் ஒருவன் சைக்கிளில் வந்து கொண்டிருக்கிறான்.

"குட்மோனிங் சேர்," குழைந்து நெளிந்து கூறியவாறு தனது சைக்கிளை ஒதுக்கிச் செல்கிறான்.

> பதவியில் இல்லாத போது ஒருவன் கண்டிக்கின்ற குற்றங்களை பதவியில் அமர்ந்தவுடன் அவனே தாறுமாறாக செய்கிறான்.
>
> —சீனப்பழமொழி

ஆறு மணிக்கு ரியூசனுக்குப் போவேணும். அதுவும் இந்த வருசம் சோதினை எடுக்கும் வகுப்பிற்கு ஆங்கிலபாடம். இரவுமுழுக்க பண்டி கலைச்சதுதான் வேலை ஒரு ஆயத்தமும் செய்ய இல்லை. பிள்ளையள பேய்க்காட்டிறதாத்தான் நான் நினைக்கிறன். ரியூசன் எண்டாலும் முன்னாயத்தம் செய்யாமல் படிப்பிக்கிறது ஒரு நல்ல அடைவை ஏற்படுத்தாது. பிள்ளைகளை சிரமப்படுத்துகிறதாத்தான் இருக்கும். மனம் குமைகிறது. ம்... நேற்று பிள்ளைகளிட்ட புதுப்பகுதி படிப்பிக்கிறன் என்று சொன்னனான். இது வரை ஆங்கிலப் புத்தகத்தை நான் திறக்கவேயில்லை இண்டைக்கு என்னத்தை படிப்பிக்க.

... ஏழரை மணிக்கு பள்ளிக்கூடம் போகவேணும். கிராமப்பள்ளிக்கூடம் என்றதால ஆசிரியவளம்தட்டுப்பாடு. அதால எனக்கு அதிபர் நாற்பது பாடவேளையும் போட்டிருக்கிறார். என்ன செய்கிறது. அதிபருக்கு எட்டாம் ஆண்டிற்கு ஆங்கிலம் அவருக்கு அந்தப் பக்கமே போக நேரமில்லை. நிர்வாகவேலை. புதுப் புத்தக விநியோகம் திணைக்களத்தில கூட்டம் இணைப் பாடவிதான ஏற்பாடுகள். ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்கின்ற கருத்தரங்குகள். பாவம் அவர்தான் என்ன செய்வார். கொம்படியில குண்டடிச்சதால உப அதிபர் யாழ்ப்பாணத்தில் இருந்து பள்ளிக் கூடத்திற்கு வரேல்ல. அத்தோடு இன்னும் சில ஆசிரியர்களும் தான்.

எனது சையிக்கிள் எங்கட படலையடியில நிற்குது. அம்மா அவசரமா போட்டுத் தந்த கோப்பியை நின்ற நிலையில குடிச்சிட்டு சவற்காரப் பெட்டியை லாவிக் கொண்டு, வாய்க்காலில குளிச்சிட்டு உடுப்பையும் கொழுவிக் கொண்டு, சாமிப்படத்துக்கு கிட்டப் போய் திருநீற்றை அவசரமாகப் பூசிக் கொண்டு, ஆங்கில வினா விடை புத்தகத்தை எடுத்துக் கொண்டு, சைக்கிளை உருட்டிக் கொண்டு படலையை கடக்கிறேன். சைக்கிள் ஒன்றில் ஐந்தாறு வாழைக் குலைகளைக் கட்டிக்கொண்டு ஒருவன்...

ஓ ! இவன் வயல்க் காவலுக்கு சென்று கொண்டிருந்த உருத்திரன். சைக்கிளை ஓடமுடியாமல் மெதுவாக தள்ளிக் கொண்டிருக்கிறான். என் மனம் வேதனையான கோபத்தால் நிறைகிறது.

பேயன் ஒழுங்காய்ப் படிக்க மாட்டான். பள்ளிக் கூடத்திற்கு ஒழுங்காய் வரமாட்டான். போனவருசம் நல்லாய்ப் படிச்சவன். இதுகளுக்கு என் படிப்பு. இன்டைக்கு பள்ளிக் கூடத்திற்கு வரட்டும், என் மனம் புகைகிறது. ஆங்கிலத்தில ஆகக் குறைஞ்சது 'டிக்ரேசன்' தான் அதைக் கூட பாடமாக்க முடியாத பிள்ளைக்குஏன்படிப்பு இண்டைக்கு இவன் பள்ளிக்கூடம் வரமாட்டான். சரி எப்படியும் தொலைந்து போகட்டும். கண்றாவியை கண்ணால காணாமல் வேற ஊருக்கு மாற்றி அனுப்பினாலும் பரவாயில்லை. ஊரில கடைசி மட்டும் படிப்பிக்கக் கூடாது. இந்த கிராமத்துச் சனம் எப்ப திருந்தப் போகுதோ.

பாடசாலை மணி தூரத்தில் கேட்கிறது. நான் காலைமையும் சாப்பிடவில்லை என்றாலும் வேகமாகப் போகிறேன். அதிபர் என்னிடம் சில பொறுப்புக்களை தந்திருக்கிறார். அதற்காக நேரத்துக்கு போக வேணும். இன்று சற்று சுணங்கி விட்டது. பாடசாலையை அடைகிறேன். அதிபரிடம் காலை வணக்கத்தைச் சொல்லிக் கொண்டு ஏனைய ஆசிரியரிடமும் சொல்லிக் கொண்டு எனது வகுப்பிற்கு விரைகிறேன்.

பாடசாலை சோபை இழந்து காணப்படுகிறது. இங்கு ஆறு ஏழு வருடங்களாக கற்பித்த, பலரை புத்தி சீவிகளாக்கிவிட்ட யாழ்ப்பாணத்து ஆசிரியர், ஆசிரியைகளும் போன வாரம் இடம் மாறிப் போய் விட்டார்கள்.

அவையள் இருக்கும் வரையில பெரிசா தெரியல்லைதான் என்டாலும் இந்தப் பாடசாலைக்கு பெரிய தொண்டு செய்து இருக்கினம். நான் கூட ஏ எல் படிக்கேக்க உதவி செய்த தயா ரீச்சரை இண்டைக்கு மட்டுமா என்றுமே மறக்கேலாது. அவை போய் ஒரு வாரம் ஆயிற்றுது ஆனா அவை கதைத்த பேசிய சிரித்த இடங்கள் முகங்களை நினைவூட்டி மனசை வாட்டுது. இன்னொரு காலம் வருமா?

மனம் குமைந்தது. என் எண்ணங்களின் இறுக்கத்தை உடைத்தவன் விமலேஸ்வரன்,

''சேர் ... குட்மோனிங்''

''ம்...விமலேஸ் கிறிஸ்ரி ரீச்சர் நட்ட அந்த மாங்கண்டுக்கு தண்ணீ ஊத்தினதோ''?

''ஓம் சேர் விடியஊத்தினவை'' அவனது பதிலை எதிர்பார்க்காது வகுப்பிற்குள் நுழைகிறேன்.

''பிள்ளைகள் நேற்றுப் படிச்சதை சொல்லுங்கோ''

''சேர் பேய்ச் சிக்ஸ் பயிண்டிங் அவுட்''

புத்தகத்தைத் தாங்கோ இண்டைக்கு டிக்டேசன் என்ன...?

பெண் பிள்ளைகள் எல்லாரும் ஓம்...ஓம் என்று துள்ள ஆண்பிள்ளைகள் விறைத்துப்போய் இருக்கிறார்கள். ஏதோ ஒன்றும் தெரியாதவர்களைப்போல, ஒரு பாசாங்கு. ஒன்றும் தெரியாதவனைப் போல நானும்.

''எழுதுங்கோ'' கொப்பிகளை எடுத்து எழுத ஆரம்பிக்கிறார்கள்.

''பத்து சொல்லுக்கு குறைஞ்சா அடி வேண்டுவியள்'' பையன்கள் பயத்தில் எழுதுகிறார்கள். எனக்குத் தெரிகிறது. பெடியங்கள் முக்கித்தக்கி எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மிகுதிப்பேர் நான் கண்டு விடக்கூடும் என கொப்பியால் மறைத்துக் கொண்டு எழுதுவது போல நடித்துக்கொண்டிருக்கிறார்கள். என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. சொல்வதெழுதல் முடிகிறது. கொப்பிகளை மாற்றி சரி பார்த்துமாயிற்று.

''பத்துச் சொல்லுக்கு குறைய எழுதியவை எழும்புங்கோ......'' ஒன்று, இரண்டு, மூன்று, நாலு பெடியளைத் தவிர எல்லாரும் எழும்பிட்டாங்கள்.

நல்ல கம்பொன்று அகப்படுகிறது ஒருவனது கையைப் பிடித்துக் கொண்டு அடியை பின் பக்கத்தில் அடிக்கிறேன். பிள்ளை நெளிகிறான்.

''என்னடா ஏன்பாடமாக்கேல்ல''

''மாடுகளை குளத்துக்கு மேச்சலுக்கு கொண்டு போனனான் நேரமில்லை.''

''நீ ஏன்?'' அடுத்தவனைக்கேட்கிறேன் ''மயில் காவலுக்கு கிளி நொச்சிக்குப் போனனான்'' ''லாம்புக்கு எண்ணை இல்லை'', ''அம்மா தேங்கா எண்ணை விளக்கு தர இல்ல'' இவ்வாறாக ஒவ்வொருவனும், கடைசியாக உருத்திரன்.

''டேய் நீ... ?''

அவன் பரிதாபமாக என்னைப்பார்க்கிறான். அதனூடே அவன் கண்கள் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

''சேர் நேற்றுப் பின்னேரம் குளத்தில மாடு திரத்தப் போனன். இரவு பண்டிக்காவலுக்குப் போனன். பனியில கொட்டிலுக்கதான் இரவு ஒரே முழிப்புத்தான். லாம்புக்கு எண்ணையுமில்ல. விடிய சந்தைக்கு வாழைக்குலை அனுப்பப் போனனான்'' 'நேற்றுக் கொண்டு போய் வைச்சதுக்கு புத்தகங்களை காலமதான் எடுத்துக்கொண்டு வாறன். ஆங்கிலம் மட்டுமில்ல எந்தப் பாடத்தையும் படிக்க இல்ல'' அவன் அடி வாங்காமலே அழுகிறான்.

நான் காவலுக்கு வயலிலிருந்து வரும்போது குறுக்கே வந்தவன் அயல் வயலில் இரவிரவாக குழறிக் கத்திப் பண்டி கலைச்சவன். வாழைக் குலை கொண்டு போனவன். இது எனக்கு தெரிந்தவரை உண்மை. இன்னும் எத்தனை உண்மைகள்! ம்...இவனை அடிக்கவா? முடியாது. அடிக்காமல் விடவா? கூடாது. மற்ற மாணவர்களை அடிச்சிட்டன்.

ஆசிரியர்களும் பிள்ளைகளும் பொருளாதாரமும் பொழுதும் பிணைக்கப்பட்ட நிலைகளில் சமுதாயம். என்னால் அவனது இடது கைப் பற்றலை விடமுடியாமல்...... குரல் அடைபட, என் கண்கள் பரிதாபத்திற்காக பனிக்க என் கைக் குட்டை என்கண்களை அரவணைக்கிறது.

# புயலில் எழுந்து நிற்க அவன் கற்றுக் கொள்ளட்டும்

தன் பலவீனங்களை
அறிந்து கொள்ளும் அளவிற்கு
பலமுள்ள ஒருவனை -
தனது அச்சத்தை
தானே விரட்டியடிக்கும்
அஞ்சாமையுள்ள ஒருவனை -
நேர்மையான தோல்வியில் பெருமைகொண்டு
சோர்வடையாத ஒருவனை -
வெற்றியின் போது
பணிவும் பண்பும் பெறும் ஒருவனை –
இறைவா எனக்கு
மகனாகத் தந்தருள்.

செயல்களின் இடத்தை
விருப்புக்களால் நிரப்பாத -
உன்னை அறிந்து அதன்மூலம்
தன்னை அறிதலே அறிவின் அடிப்படை
என உணர்ந்த ஒருவனை
இறைவா எனக்கு
மகனாகத் தந்தருள்.

மென்மையும் சொகுசுமான
பாதைகளில்
அவனை நீ வழிநடத்தாமல்
சவால்களும்
நெருக்கடிகளும்
அழுத்தங்களும் நிறைந்த
வழியினூடாகவே
அவனை வழிநடத்து.
புயலில் எழ அவன் கற்றுக்கொள்ளட்டும்.
வீழ்ந்தவர் மீது கருணையுற
அவன் கற்றுக் கொள்ளட்டும்.
தெளிந்த மனமும் உயர்ந்த இலக்கும்,
மற்றவரை ஆளுமுன்
தன்னைத்தான் ஆளும் திறனும்,
எதிர்காலத்தை அடையும் வேளை
இறந்த காலத்தை மறக்காத தன்மையும்
நிறையப் பெற்ற ஒருவனை -
இறைவா எனக்குத் தந்தருள்.

ஈற்றில் அவையாவும் அவனுடையவை.
அவன் எப்போதும்
கருமமே கண்ணாய் இருக்கும் அதேவேளை
தன்னை ஓர் பொருட்டெனக்கொள்ளாது
போதிய கௌரவிக்கும் உணர்வினை
அவனுக்குக் கொடு என
இறைவா நான் இறைஞ்சுகிறேன்.

அவனுக்குப் பணிவைக்கொடு
உண்மையான பேராற்றலில்
எளிமையைக் கொடு.
உண்மை ஞானத்தின் திறந்த மனத்தையும்
உண்மைத் தைரியத்தின் அடக்கத்தையும்
அவனுக்குக் கொடு.

அவ்வாறாயின்,
அவனது தந்தையாகிய நான்
துணிவுடன் மெல்ல உரைப்பேன்
''நான் வீணில் வாழவில்லை!''

— ஜெனரல் டக்ளசு மக்ஆதர்

ஜெனரல் டக்ளசு மக் ஆதர்
(*Douglas Mac Athur*)
**1880 - 1964**

அண்மைய வரலாற்றின் மிகச்சிறந்த அமெரிக்க இராணுவ மேலாளர்களில் மக்ஆதரும் ஒருவர். முதலாம் உலகப் போரில் தாக்குதல் பிரிவு ஒன்றிற்கு இவர் பொறுப்பாக இருந்தார்.

இரண்டாம் உலகப் போரின்போது 1949ம் ஆண்டு ஜெனரலாக பதவி உயர்வு பெற்றார். தென் மேற்கு பசுபிக்கடல் பகுதியில் நடைபெற்ற சமர்களில் நேசநாட்டுப் படைகளுக்கு தளபதியாக இருந்தார்.

இரண்டாம் உலகப் போரில் (2. 9. 1945) யப்பான் சரணடைந்தது. மிசூரி என்ற கப்பலில் இவர் முன்னிலையிலேயே அவர்கள் சரணடைந்தனர்.

போருக்குப் பின் 1945 இல் இருந்து 1951வரை யப்பானின் அரசியல் ஆளுமை இவரிடமே இருந்தது. இரண்டுமுறை போரில் காயமுற்ற இவர் பதின்மூன்று முறை இவரது திறமைக்காக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மிகச்சிறந்த பேச்சாளரான இவர் 1951ம் ஆண்டு பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

அப்போது அவர் கூறிய வார்த்தைகள்

''வீரர்கள்சாவதில்லை வரலாறு ஆகின்றார்கள்.'' என்பதாகும்.

# "எயிட்ஸ்" நோயிலிருந்து தப்ப வள்ளுவன் வகுத்த மருந்து

(சென்ற இதழ் தொடர்ச்சி)

முத்து விஜயராகவன்

எயிட்ஸ் வைரஸ் மனித உடலில் உள்ள கலங்களைச் சேர்வதற்கு $CD_4$ என்ற வகைப் புரதம்தேவை. இந்த $CD_4^+$ ரீ ஹெல்பர் கலங்களிலும் (T-helper cell) சிலவகை மக்ரோபாஜஸ் (Macrophage) இலும் இருக்கின்றன. இத்தன்மையை ஆராய்ந்த விஞ்ஞானிகள் $CD_4$ வகைப்புரதத்தை மருந்தாக உபயோகிப்பதன் மூலம் எயிட்ஸ் வைரஸ் மனிதக் கலங்களுடன் சேர்வதைத் தடுக்க முடியும் என்ற கருத்தை முன் வைத்தார்கள்.

மேலும் இந்த எயிட்ஸ் வைரஸ் (HIV) உடலில் பெருகுவதற்கு ரிவேர்ஸ் ரான்ஸ்கிரிப் டேப்ஸ் (Reverse Transcriptase) என்ற நொதியம்(Enzyma)தேவை. இதன் செயலைத் தடுப்பதன்மூலம் சிட்டோவிடின் (Zidovudine) என்ற மருந்தையும் பரிசோதனை நிலையில் உபயோகிக்கின்றனர்.

ஆயினும் இம்மருந்துகள் முற்றாக வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் எயிட்ஸ் வைரஸ் ஆனது தனது சில உயிரியல் இயல்புகளை (Biological Hetrogencity) அடிக்கடி மாற்றக் கூடியது. ஆனால் தடுப்பு மருந்துகளோ இவ்வியல்புகளை அடிப்படையாக வைத்தே தயாரிக்கப்படுகின்றன. எயிட்ஸ் நோய் வைரஸ் இந்த உயிரியல் இயல்புகளை அடிக்கடி மாற்றுவதால், தடுப்பு மருந்து தயாரிப்பதும் சிக்கலாகியுள்ளது. ஏனெனில் மாற்றமுறும் ஒவ்வொரு இயல்புக்கும் தடுப்பு மருந்து தயாரிக்கமுடியாது. எனினும் எல்லா எயிட்ஸ் வைரஸ் உப பிரிவுகளுக்கும் ஓரிரு பொதுவான உயிரியல் இயல்புகள் இருக்கக்கூடும். இதைக் கண்டு பிடிப்பதற்காக எயிட்ஸ் வைரஸ் இன் உயிரியல் இயல்புகள் பற்றி மேலும் தீவிரமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் ஆராய்ச்சிகள் வெற்றியளிக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

விஞ்ஞானிகளைக் கவர்ந்த மற்றொரு விடயம் எயிட்ஸ் ஒரு பரம்பரை நோயாக உள்ளமையாகும். தாயிலிருந்து குழந்தைக்கு பரம்பரை அலகுகள் மூலம் இந்நோய் கடத்தப்படுவதை விஞ்ஞானிகள் அவதானித்தனர். இந்நிகழ்வு அவர்களை எயிட்ஸ்வைரஸ் பற்றிய ஆராய்ச்சிக்கு இட்டுச் சென்றது.

பெரும்பாலான வைரஸ்களின் பரம்பரை அலகுகள் (Genetic Material) அவற்றின் DNAயிலேயே இருக்கும். ஆனால் எயிட்ஸ் வைரசிலும் (HIV) அதையொத்த ஏனைய ரெட்ரோ வைரஸ்களிலும் அவை RNAயில் அமைந்திருக்கும். மனிதக் கலத்துடன் இந்த HIV இணைந்ததும் தனது தனி இழையான RNA யை ரிவேர்ஸ் ரான்ஸ்கிரிப்டேஸ் என்ற நொதியத்தின் உதவியுடன் இரு இழையுடைய DNA யாக பெருக்கி விடும். பின்னர் எயிட்ஸ் வைரஸ் இன் DNA ஆனது மனிதக்கலத்தின் DNA யுடன் இணைந்துவிடும்.

இத்தன்மைகளை ஆராய்ந்த அறிவியலின் முன்னணி விஞ்ஞானியான - ஃபிரான்ஸ்வா ஜேக்கப் என்பவர், ஏப்பிரல் 1991 இல் 'யுனெஸ்கோ கூரியர்' இதழுக்கு அளித்த பேட்டியில் ''எயிட்ஸ் நோய்க் கிருமிகளைப் பகுப்பாய்வு செய்து, மரபணுப் பொறியியலின் (Genetic Engineering) உதவியுடன் அணுகினால் அந்நோயைத் தீர்ப்பது சாத்தியமாகலாம்'' என்ற கருத்துப்படக் கூறினார். இது ஒரு முன்னேற்றகரமான தகவலாகும்.

எனினும் எயிட்ஸ் எந்த மருந்துக்கும் அடங்க மறுக்கிறது. மனிதக் கலத்தின் DNA யுடன் இணையும் HIV யின் DNA பல்கிப் பெருகி பல HIV க்களாக பரவி புதிய மனிதக் கலங்களையும் தாக்

## அருத்த ஒலிம்பிக்

இம் முறை ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஸ்பெயின் நாட்டின் பாசிலோனியா நகரில் நடைபெற்றமை தெரிந்ததே. மிகக் கூடுதலான நாடுகள் இம்முறை பங்கு பற்றிய இப்போட்டியில் 15,000 மேற்பட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கு பற்றினர். 173 நாட்டின் தேசிய ஒலிம்பிக் குழுக்கள் பங்கு பற்றின.

1996ம் ஆண்டு நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகள் அமெரிக்க மாநிலமான ஜோர்ஜியாவின் தலை நகரான அட்லாண்டாவில் (Atlanta) நடைபெறவுள்ளது. இப்பொழுதிலிருந்தே அட்லாண்டா தயாராகி வருகின்றது. ஒலிம்பிக் சின்னம் தாங்கிய தொப்பிகள், மேலங்கிகள், கடந்த 1வருடமாகவே விற்பனைக்கு வந்து விட்டன. நகரெங்கும் ஒலிம்பிக்கை குறிக்கும் பானர்கள் கட்டப்பட்டு விட்டன. பல லட்சம் மக்கள் விளையாட்டுக்களை நிழலில் இருந்து பார்ப்பதற்காக 5000 நிழல் மரங்கள் நாட்டப்பட்டு வருகின்றன.

கும். இவ்வாறு எயிட்ஸ் வைரஸ் மனிதக் கலத்திலுள்ள பரம்பரை அலகுகளுடன் இணைந்துவிடுவதால் எயிட்ஸ் எந்த மருந்துக்கும் குணப்படாத ஒரு தொற்று நோயாக தொடர்ந்தும் பரவிவருகிறது.

இந்நேரத்தில் நாம் நாகரீகத்தின் உச்சியில் நர்த்தனமாடும் நாடுகளிடம் எயிட்ஸ் நோய்க்கு மருந்தை நாடி நிற்பது மடமையாகும். ஆதலால் வள்ளுவன் போன்ற பெரியோர்கள் எமக்காக என்றோ செய்து வைத்துவிட்டுப் போன எம் பாரம்பரிய வைத்தியங்களை நாம் அனுசரித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் காலுக்குள் மருந்திருக்க கதிர்காமம் போகும் செய்கையை கைவிட்டு விடவேண்டும்.

◈ ◈ ◈

எயிட்ஸ் நோயின் பரவுகைக்கு மூலாதாரமான காரணமே ஆசைதான். மனிதன் ஆடையின்றிப் பிறந்தானேயொழிய ஆசையின்றிப் பிறக்கவில்லை. ஆசை வெட்கம் அறியாததாலோ என்னவோ இன்று அந்த ஆசையே மனிதனை அவன் அழிவுக்கு இட்டுச் செல்வதை கண்கூடாகக் காண்கிறோம். ஆதலால் நாம் ஆசைக்கு மூக்கனாங் கயிறு போடுவதன் மூலம் பல ஆபத்துக்களில் இருந்து தப்பலாம். வள்ளுவனும் இதை நன்குணர்ந்திருந்ததால் தான் அவனால் எயிட்ஸ் நோய்க்கு மேன்மையானதொரு மருந்தைச் செய்ய முடிந்தது எதிர்காலச் சந்ததியையும் எச்சரிக்க முடிந்தது.

வள்ளுவன் ஆண் பெண் இரு பாலருக்கும் உண்மை நிலையை அறிவுறுத்தத் தவறவில்லை.

அவன் ஆண்களை விளித்து ''வரைவின் மகளிர்'' என்னும் அதிகாரத்தையே வகுத்தான். அதில் ஒரு துளி.

''தந்நலம் பாரிப்பார்
தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்''

அழகு முதலியவற்றால் செருக்குக் கொண்டு தம் புன்மையான நலத்தை விற்கும் பொதுமகளிரின் தோளை, தம் நல்லொழுக்கத்தைப் போற்றும் சான்றோர் பொருந்தார், பொருந்தவும் கூடாது. என்பதுதான் இதன் பொருள்.

''வாழ்க்கைத் துணைநலம்'' என்னும் அதிகாரத்தில் வள்ளுவன் பெண்களை

'தற்காத்துத் தற்கொண்டாற்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள்
பெண்''

என்று வரையறுப்பான். அதாவது கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என்பான் வள்ளுவன்.

கற்புப் பற்றி கதைக்க வந்த வள்ளுவன் அதைப் பெண்களுக்கு மட்டும் வலியுறுத்தி ஆண், பெண் பேதம் காட்டவில்லை. கற்பு இரு பாலருக்கும் உரியது. இரு பாலரும் கடைப்பிடிக்க வேண்டியது. என்றான் வள்ளுவன். ஆண்கள் மட்டும் கற்பை விட்டுவிட்டு பெண்களை மட்டும் கடுங்காவல் என்னும் கட்டுக்கோப்புக்குள் வைத்து கற்பை எதிர்பார்ப்பதை வள்ளுவன் விரும்பவில்லை. அவன் தன் உலகப் பொதுமறையாம் திருக்குறளில் ஓரிடத்தில் கூறுவான்.

''சிறைகாக்குங் காப்பு எவன்
செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை''

இக்குறளின் பொருள், மகளிரைக் காவல் வைத்துத் காக்கும் காப்பு முறை என்ன பயனை உண்டாக்கும்? அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் காப்பே சிறந்தது என்பதாகும்.

ஆக வள்ளுவன் இங்கு கூறியவற்றிற்கெல்லாம் ஆதாரமாக கோடி காட்டுவது என்னவென்று ஆராயின்- அது ஒழுக்கமே என்று விடை கிடைக்கும். இதனால்த் தான் வள்ளுவர் ''ஒழுக்கமுடைமை'' என்னும் அதிகாரத்தையே ஆக்கி

''ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்
இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந் ''

என்றான். ஒழுக்கம் தவறுவதால் குற்றம் உண்டாவதை அறிந்து மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் இருந்து தவறாமல் தம்மைக் கர்த்துக் கொள்வர் என்பது இதன் பொருளாகும். இதனாலன்றோ ''அரைக்காசிற்கு இழந்த மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் திரும்பி வராது'' என்றார்கள் எம் பெரியோர்.

''அது சரி, வள்ளுவன் எயிட்ஸ் நோய்க்கு ஏதோ மருந்து, மூலிகை எல்லாம் சொல்லியிருப்பதாகச் சென்னீர்களே, என்ன மறந்து விட்டீர்களா? அது என்னவென்று முதலில் சொல்லுங்கள்'' என நீங்கள் அவசரப்படுவது எனக்குப் புரிகிறது. நான் ஒன்றும் மறக்கவில்லை. வள்ளுவன் வகுத்த மருந்தைத் தான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே... என்ன விழிக்கிறீர்களா?

ஆம், வள்ளுவன் கூறிய அந்த அரிய மூலிகை வேறொன்றுமில்லை ஒழுக்கந்தான். அதிலிருந்து அவன் பிழிந்துதந்த சாறுதான் கற்பு. அது இருபாலருக்குமுரியது என்பது வள்ளுவன் வாதம்.

வள்ளுவன் தான் எவ்வளவு பெரிய வைத்தியன், தீர்க்க தரிசனவாதி. அவனை யார் கண்டு கொண்டார்கள்? அவன் வையகத்துக்குத் தந்துவிட்டுப்போன திருக்குறளை எவனோ ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க எத்தனை எத்தனை வேற்று மொழிக்காறர்கள் அதைத் தேடித் தேடிப் படிக்கிறார்கள் இது ஏன் எமக்குப் புரியவில்லை. வள்ளுவன் குறளால் குறுக்கித் தந்ததை நாம் ஏன் நம் மனத்தால் பெருக்கி உணரத் தவறினோம். கடுகு சிறிது தான் ஆனாலுங் காரம் பெரிதல்லவா.

''வாழ்க! வான்மறை தந்த வள்ளுவப் பெருந்தகை'' என்ற வரியையும் மிஞ்சி ''வாழ்க! எயிட்ஸ் நோய்க்கு மருந்து தந்த வள்ளுவனார்'' என்ற வரி ஓங்கி ஒலிக்கட்டும்.

# பகலவன் பதில்கள்

த. சைல், துனுக்காய்.

கே: முன்பெல்லாம் வீதியில் செல்பவர்கள் 'எதிரிகளின் பாசறை' பாடலைப்பாடிச் சென்றார்கள். இப்போது 'போவோமா ஊர்கோலம்' என்று பாடுகின்றார்கள் இவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: போராளிகள் எதிரிகளின் பாசறையைத் தேடிப்போவதாலேயே 'போவோமா ஊர்கோலம்' தாங்கள் பாடமுடிகின்றதென்பதை உணர்ந்தால் சரி.

கே: உங்கள் பெயரிலுள்ள பகலவன் என்பது எதைக் குறிக்கின்றது?

ப: பகலவன் என்பது இருளை அகற்றி ஒளி ஏற்றும் சூரியனின் மறுபெயர்

செ. சிவஞானம்,
உமையாள்புரம், கிளிநொச்சி.

கே: 'பெண்மை' என்பது பற்றி இலக்கியங்கள் பலவாறு பொருள் தருகின்றன. உங்கள் விளக்கம் என்ன?

ப: பெண்மை, ஆண்மை, என்பதெல்லாம ஆண்மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடுகள். ஆண் - பெண் சமத்துவ சமுதாயதில் இந்த வேறுபாடு அர்த்தமற்றது.

ச. உமாமணிதேவி, மட்டுவில்.

கே: அண்மையில் இடம்பெற்ற சோவியத்ஒன்றியத்தின் உடைவுக்குக் காரணம் என்ன? கம்யூனிஸத்தின் தோல்வியா?

ப: நடைமுறை பிசகியதன் விளைவு.

கபிரியேல்பிள்ளை கல்பனா,
கன்னியர்மடம் ம. வி.
யாழ்ப்பாணம்.

கே: இன்று உலகளாவிய ரீதியில் மனித மாண்புகள் புறக்கணிக்கப்படுகின்றன. இதற்கான அடிப்படைக் காரணம் என்ன?

ப: மனித மாண்புகள் முழுமையாக மதிக்கப்பட்ட காலமொன்று இருந்ததாகத்தெரியவில்லை. மனிதனின் பேராசையே மனித மாண்புகள் மதிக்கப்படாததற்குக் காரணம்.

கே: எமது கலை, பண்பாடுகளை மதியாத எம்மவர் பற்றி உங்கள் கருத்து யாது?

ப: பதர்கள்.

ஜெ. கோகுலன்,
யாழ். இந்துக்கல்லூரி

கே: தற்போது சிங்கள இனவாத அரசின் நிலை என்ன?

ப: நிலை குலைந்த நிலை.

கி. செல்மர் எமில்,
ஊர்காவற்துறை.

கே: பதுக்கல் வியாபாரிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: மிகமோசமான மக்கள் விரோதிகள்

கே: கனவு என்றால் என்ன?

ப: மனிதனின் ஆழ்மனதில் படியும் அச்சம், ஆசை என்பனவற்றின் வெளிப்பாடே கனவு ஆகும்.

வி. தவக்குமார்,
நாயன்மார்க்கட்டு.

கே: பட்டிமன்றங்களால் பலன் உண்டா?

ப: நிச்சயமாக உண்டு - சமகாலப் பிரச்சினைகள் பற்றிய சிந்தனையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தக் கூடிய விடயங்கள் விவாதத்துக்கு எடுக்கப்பட்டால்.

## இயந்திரக் கண் (Traffic Eye)

யப்பான் நாட்டின் நிசான் கார்க் கம்பெனி ஒரு புதுமையான கருவியொன்றை விபத்துக்களை தவிர்ப்பதற்காக கண்டு பிடித்துள்ளது. அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட இக்கருவி 'Traffic eye' என அழைக்கப்படுகின்றது. 'லேசர்' ஒளிக்கதிரைப் பயன்படுத்தியே இக்கருவி இயங்குகின்றது. வாகனங்கள் ஒன்றையொன்று மிக அருகே நெருங்கும் போது அபாய ஒலியை(Alarm) எழுப்பி வாகன ஓட்டுநர்களை விழிப்புறச் செய்துவிடுகின்றது. வாகனங்கள் முற்பக்கத்தில் பொருத்தப்படும் லேசர் ஒலிக்கற்றையை வெளிவிடும் இக்கருவி வாகனங்கள் எவ்வளவு வேகத்தில் செல்கின்றன என்பதையும், ஒவ்வொன்றும் எவ்வளவு தூரம் மிக அருகாக செல்கின்றன என்பதையும் கணிக்கின்றன. (உதாரணம்) பின்செல்லும் வாகனமொன்று முன்செல்லும் வாகனத்தை விட மணித்தியாலத்திற்கு 3.6 கிலோ மீற்றர் வேகத்தில் கூடுதலாக செல்கின்றன என வைத்துக்கொள்வோம். ஒரு குறிப்பிட்ட தூரம் வந்தவுடன் இக்கருவி அபாய ஒலியை எழுப்பி மோதலை தவிர்க்கும் 100 மீற்றர் வரை இவ்வாறு பயன்படும் இக்கருவியின் விலை அமெரிக்க டொலர் 2400 ($ 2400) ஆகும்.

☐ உருவகம்

# நினைவும் வாழ்வும்

நாக. பத்மநாதன்

அது கிராமத்தின் தெருவோரத்திலுள்ள ஒரு கோழிப் பண்ணை. அங்கு வந்து போவோர் பலர்; கோழிகள் ஏராளம்; முட்டைகளும் பெருந்தொகை!

அந்த முட்டைகளுட் சில தம்மிடையே நன்றாகக் கதைத்துக் கொள்ளும். அவற்றின் கதை வெளிக்குத் தெரியாது, எவருக்கும் கேட்காது- அத்தகைய உள்ளுணர்வுடன் கூடிய அந்தரங்கப் பேச்சு அது!

அதில், மனித கை பட்ட அந்த முட்டையொன்றுக்கு தன்னை மறந்த பெருமை! பெரிய இடத்துச் சகவாசம் தனக்குக் கிடைக்கும் எங்கேனும் போய் பெரிய "கேக்" ஆக இருப்போம், என்ற பெருமையில் அது மிதந்து கொண்டிருந்தது!

"இவ்வளவு காசுக்கு வாங்கப்பட்டு இவ்வளவுக்கு விற்கப்பட்டு எவ்விதமேனும் இவ்வளவு இலாபத்தைத் தேடி விட்டே போக வேண்டும்." இது இன்னொரு முட்டையின் இலட்சியம்!

"கலங்காமல் இந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருப்போம். காசானால் என்ன? சுறியானால் என்ன?" இவ்விதம் அழகாக உட்கார்ந்து கொண்டன வேறு சில!

"அது என்னவாம்?"

ஏக மனதாகக் கேட்டன அத்தனை முட்டைகளும். கோடிப் பக்கத்து அறையொன்றில் இருந்த முட்டையைப் பற்றித்தான் அவை ஆராய்ந்தன.

"முட்டையா அது?"

"பிறந்து எட்டு நாளாகி விட்டது. இன்னும் அங்கு அழுக்குப்படக் கிடக்கிறது."

"தாயின் இருளிலே மறைந்து கிடக்கிறது."

"அது மட்டுமா? உள்ளே கலங்கிக் கொண்டும் இருக்கிறது."

"இவ்விதம் உள்ளே கலங்கி என்ன பயனாம்?"

"உடைவதுதான் பயன்!" - எல்லா முட்டைகளும் ஏகப்படச் சிரித்தன!

நிழல் - ஒளித் திரையிலே நாட்கள் விரைந்து ஓடின.

ஒரு வாரம் செல்லு முன் பெரிய மோட்டார்காரில் சென்று பெரிய "கேக்" ஆகிற்று ஒரு முட்டை!

விரும்பிய இலாபத்தை இரண்டு நாட்களுள் உழைத்து விட்டு மறைந்தது வேறொன்று.

கலைஞனின் தூரிகை பட்ட அலங்காரக் கோதாகி ஒரு வீட்டில் நின்றது இன்னொன்று.

மேலும் நாட்கள் ஓடின; ஓடி விட்டன.

இப்போது அந்த அடைமுட்டை - அது தன்னுள் உருமாறி, உடைந்த பழங்கோதாகி குப்பைமேட்டில் கிடக்கிறது.

ஆனால் அது உலகுக்கு அளித்த இளம் சேவற் குஞ்சொன்று - நெஞ்சை நிமிர்த்தி - குரல் கொடுத்துக் கூவத் தொடங்குகிறது.

"நாம் வாழ்வோம்! எம் இனம் வாழும்!" என்ற கீதம் அதன் குரலிலே எழுந்து பரந்து மிதக்கிறது.

☐ வாழ்க்கையில் வெற்றிபெறுவது பெரிய காரியமல்ல. வாழ்க்கை என்பதே துணிச்சல் நிறைந்த முயற்சி என்பது தான் பொருள். துவண்டு விடாமல் போராடப்பழகிக் கொண்ட எந்த ஒரு மனிதனும் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம்.

— ஹெலன் கெல்லர்

(பார்வையையும், கேட்கும் சக்தியையும் பிறவியில் இழந்த பெண்மணி)

குடாநாட்டின் அத்தியாவசிய சேவை !

சகலவிதமான
ஆங்கில மருந்துவகைகள்
அனைத்தும்
மிக மிக நெருக்கடிகளின் மத்தியிலும்
பெற்றுத்தருகின்றோம்.

# குறிஞ்சி மருந்தகம்

திருநெல்வேலிச்சந்தி, — பலாலி வீதி, திருநெல்வேலி.

# தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்!

பண்டிதர்
வீ. பரந்தாமன்

இந்துமாக் கடலின் அடிநிலம், சிலகோடி ஆண்டுகளுக்குமுன் எழில் கொஞ்சும் குறிஞ்சியாகவும் முல்லையாகவும் உலகின் தென்கோடி வரை விரிந்து கிடந்தது என்றும், அந்நிலப்பரப்பே மனிதவினத்தின் தாயகம் என்றும் ஐரோப்பியரான நிலவியல் (Geography), மாந்தவியல் (Anthropology) நூல் வல்லார் விளம்பினர். அவர்கள், அதற்கு 'இலெமுரியா, (Lemuria) எனவும் தமிழ்ச் சான்றோர் 'குமரிக்கண்டம்' எனவும் பெயர் குறித்தனர்.

குமரிக் கண்டத்திலேயே பண்டைத் திராவிட-தமிழினம் தோன்றியதாகவும் தமிழ்ச்சான்றோர் கூறுகின்றனர்.

உலகில் வழங்கும் மொழிகள் எல்லாம் தொடக்கத்தில் ஒரு பண்டை மூலமொழியிலிருந்து கிளைத்திருத்தல் வேண்டும் என்று மாக்சுமுல்லர் (Max Muller), எட்கின், (Edkin) முதலிய ஐரோப்பிய மொழியியல் நூல் (Philology) அறிஞர்கள் கருதினார்கள்.

"முக்குலங்களுக்கும் (ஆரியம், சேமியம், துரேணியம் அல்லது சித்தியம்) ஒரு மூலம் உண்டெனில், அம் மூலத்துக்குத் திராவிடம் தமிழ்மொழி மிக நெருங்கியதாகும்" என்று அறிஞர் கால்டுவெல் (Caldwell) உரைக்கின்றார்.

மேலும் அக்கருத்தை நிலைநாட்ட கண்டமிழ்ப் புலவர் பலரும் முயன்று வருகின்றனர். உலக மொழிகளுக்கெல்லாம் மூலமான முதற்றாய்மொழி ஆகும் தகுதி, எம் தமிழுக்கே உண்டு என எண்ணும்போது, உவகையால் உள்ளம் துள்ளுகிறது, மெய்ம்மயிர் சிலிர்க்கிறது!

தென்குமரியை எல்லையாகக் கொண்டு, மிகத் தொன்மாந்தர் இயல்போடு இருக்கும் தமிழினத்துக்கு இல்லாத பெருமை, வேறுயாருக்கு வரும்? பொய்யில்லை; இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழர்கள் கோல்கொண்டு ஆண்டவர்கள்; கொடிகட்டிப் பறந்தவர்கள்! சங்கம் வைத்தவர்கள்; கங்கை, இமயம், சிங்களம், கடாரம், சாவகம் எங்கணும் வென்று கொடி நட்டவர்கள்! கொற்கையிலும் மாந்தையிலும் மூச்சடக்கி முத்தெடுத்து, அலைகடலில் கலமோட்டி மேலையவனரொடும் கீழ்பால் சீனரோடும் வாணிகம் செய்தவர்கள்! கோட்டைகட்டி கொலபொறிகள் பல மாட்டி, மறத்தால் மாற்றாரை வென்று புறங்கண்டவர்கள்; பண்ணிசைபாடிக் களித்தவர்கள்! நல்லறிவும் பல்கலையும் பண்பாடும் இஞ்ஞாலமெங்கும் பயனுற நல்கியவர்கள்!

திராவிட மொழிக் குடும்பத்திலே சிறந்த ஒப்பியல் ஆய்வினைச் செய்தவர் அறிஞர் கால்டுவெல் என்னும் ஐரோப்பியராவர். "உலகத்தில் எந்த மொழியிலும் பார்க்க, தொன்மை செம்மை இனிமை, இலக்கிய வளம் முதலிய பல சிறப்புகளிலும் ஒப்புயர்வற்று, உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவது தமிழே" என்று அசைக்க முடியாத சான்றுகளோடு உலகுக்கு உணர்த்தியவர் அந்த ஐரோப்பியரான அறிஞர் கால்டுவெல் அவர்களே!

அப்பெரியாரின் வாய்மொழிதான், ஆரிய மாயையினால் கட்டுண்டு முடியிழந்து தன்னிலை மறந்து-உறங்கிக்கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பியது; தடுமாறித் தாழ்ந்த தமிழினத்துக்கும் தமிழுக்கும் புத்துணர்ச்சி ஊட்டி மறுவாழ்வு அளித்தது.

தமிழினத்தின் தொன்மையை பண்டைத் தமிழ் நூலொன்று (புறப்பொருள் வெண்பா மாலை) இவ்வாறு கூறுகிறது.

"பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்?
வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகல
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி"

நிலசகோளம் உருவாகி அதன் மேலோடு குளிர்ந்த நாளில், நீண்ட காலம் நீரால் மூடப்பட்டுக் கிடந்தது காலமோடிக் கழிய நீரோடி வடிந்து நெடுங்கடலாக நிலைத்தது. அந்நாள், மலைகள் முன்தோன்றி மண்ணிலம் (சமநிலம்) தோன்றுமுன்னே மறத்தோடு (வீரம்) தோன்றிய மூத்தகுடியாகிய தமிழ்க்குடி நாளும் புகழ் விளைப்பதில் என்ன வியப்புண்டு?

பழங்குடி இப்பாரிலே புகழ்விளைப்பதில வியப்பில்லையாம்! அப்படி மறத்தோடும் மானத்தோடும் வாழ்ந்த மூத்தகுடி, தமிழ்க்குடி!

ஞாலத்தில் ஞாயிறு (கதிரவன்) எப்படி விளங்குகிறதோ, அப்படியான பெருமையும் விளக்கமும் தமிழுக்கும் உண்டு! என்று ஒரு பாடல் (தண்டியலங்காரம்) கூறுகிறது

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகடியும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேரில் லாத தமிழ்" (ஓங்கல் - மலை)

மலையிலே வந்து தோன்றி, உயர்ந்தோரால் தொழப்படுவதாய் விளங்கி, இஞ்ஞாலத்தில் இருளகற்றும் பொருள் இரண்டு ஒன்று ஞாயிறு; மற்றையது தனக்கு ஒப்பில்லாத தமிழ்! (ஞாயிறு புறவிருளை ஒட்டும்; தமிழ், அகவிருளை (அறியாமை) அகற்றும்).

தமிழ் என்றால், இனிமை என்பது பொருள். நிகண்டிலும் பேரகர முதலிகளிலும் உண்டு. பல இலக்கியங்களிலும் தமிழ் என்னும்சொல், இனிமை என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. (இனிமையாவது இலக்கியங்களைக் கற்கும்போது உண்டாகுமோரின்பம்)

தமிழின் இனிமையை தமிழர்கள் மட்டுமல்ல; தமிழைக்கற்ற ஐரோப்பியரும் நயந்து வியந்து போற்றுகிறார்கள் பெசுக்கி (Beschi) எனனும் இயற்பெயர் கொண்ட இத்தாலியப் பாதிரியார் தம் பெயரையே வீரமாமுனிவர் என மாற்றியமைத்துக்கொண்டு, தமிழுக்குச் செய்த தொண்டுகள், காலத்தால் அழியாதவை. மற்றும், ஆங்கில நாட்டறிஞர் ஒருவர், தம் கல்லறையில், ''இங்கு ஒரு தமிழ்மாணவன் உறங்குகிறான்'' என்று எழுதுவித்தார் என்றால், அன்னார் தமிழின்பாற் கொண்டிருந்த பற்றை அளவிட முடியாது! மேலும் தமிழுக்குத் தொண்டு செய்த GU போப், கால்டுவெல் முதலான மேற்குலக அறிஞர்கள் பலரையும் (ஐம்பதுக்கு மேற்பட்ட எண்ணினர்) நாம் மறத்தல் இயலாது!

தமிழறிஞர், தமிழை கண்ணென்றும் பொன்னென்றும் உயிரென்றும் போற்றிப் பேணுவர். அதனாற்றான், அதனை செந்தமிழ் - பைந்தமிழ் - வண்டமிழ் - ஒண்டமிழ்- தண்டமிழ் - தென்றமிழ் - தேன்றமிழ் – அருந்தமிழ் - இருந்தமிழ் - நற்றமிழ் - பொற்றமிழ் - இன்றமிழ் - இன்பத்தமிழ் என்றெல்லாம் இயம்புகின்றனர்.

புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கள், தமிழ் தம் எண்ணத்தில் இனித்த தன்மையையும் அது தம் உயிரோடு கலந்த உணர்ச்சியையும்

"தமிழுக்கும் அமிழ்தென்று பேர் - இன்ப
தமிழெங்கள் உயிருக்கு நேர்'' என்றும்,
"தாயைப் பழித்தால் தாய் தடுத்தால் விடுவேன்
தமிழைப் பழித்தால் யார் தடுத்தாலும் விடேன்'' என்றும்
"இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும நாளெனக்குத் திருநாள் ஆகும்''
என்றும்,
"எங்கள் வாழ்வும் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'' என்றும்
கூறிக் குதிக்கிறார். மகாகவி பாரதியார்,
''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'' என்றும்,
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்'' என்றும்,
''செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'' எனறும் பாடி
மகிழ்ச்சியில் திளைக்கிறார்.

மற்றுமொரு தமிழ்ச்சான்றோர், "செந்தமிழே! உன்னால் வாழ்கின்றேன்; இனி தேவர் அமிழ்தமாயினும் வேண்டுகிலேன்'' என்று தம் தமிழ் வாழ்வை எண்ணி நெஞ்சம் விம்முகிறார்:

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்த மெனினும வேண்டேன்!''(தமிழ்விடுதூது)

## பவளவிழாக் கண்டு ...

(7ஆம் பக்கத் தொடர்)

அதிக அளவு முன்னேறியதால் அப்போரில் நடப்பவை நேரடியாகத் தெரியவந்தது இப்போரில் தொடர்புத் துணைக் கோள்கள் உலகின் மனச்சாட்சியாக இருந்தன அரசியலைக்கூடப் பாதித்தன. மக்களின் மன மாற்றத்தை உருவாக்கின.

### செவ்வாயில் தோட்டம் !

அடுத்த நூற்றாண்டில் பூமியைப்போன்று பரந்தபரப்பளவை கொண்ட செவ்வாய்க் கிரகத்திலேயே மனித நடவடிக்கைகள் இருக்கும் என இவர் கூறுகின்றார். வைக்கிங் துணைக்கோள் எடுத்துக் கொடுத்த செவ்வாய்கோளின் உண்மைப் படங்களை வைத்துக் கொண்டு கொமடோர் அமிகோ (Commodore Amigo) என்னும் கணணி மூலம் கிளார்க் அக்கோளில் எப்படி தோட்டச் செய்கைகள் மேற்கொள்ளலாம் என ஆராய்ந்து வருகின்றார். அங்குள்ள இமயத்திலும்பார்க்க மூன்றுமடங்கு உயரம் கூடிய 90,000 அடி ஒலிம்பஸ் மலையின் நிறப்படங்கள் எடுக்கப்படுகிறது. கணனிகள் செவ்வாய்க் கோளின் தரைமட்டத்தில் காடுகளையும் அழ்கடல்களையும் பண்ணைகள் எனப்பிரித்து கணக்கிடுவதில் ஈடுபட்டிருக்கின்றன. இவற்றின் விபரங்களை அடக்கியதாகவே அவரது அடுத்த நூலான ''ஒலிம்பஸ் மலைப்பனி-செவ்வாய்க் கோளின் தோட்டம்'' (The Snows of mt. olmpus A garden of Mars) இருக்கும் அது அவரின் 77வது நூலாகும். அநேகமாக தண்ணீர் எதுவுமற்ற சந்திரனைப் போல் அல்லாது செவ்வாய்க்கோள் தணிவான சூழலைக் கொண்டது என்கிறார் கிளார்க்.

1945ம் ஆண்டு 'செய்தி தொடர்புகள்'' என்ற தலைப்பில் ஆர்தர் சி. கிளார்க் எழுதிய கட்டுரையில் 2000ஆவது ஆண்டில் மனிதன் சந்திரனில் கால் பதிப்பான் எனக்கூறினார் யாரும். அப்படி நடக்கும் என அப்போது நம்பவில்லை

எதிர்காலத்தில் மனிதன் செவ்வாய்க் கோளில் தோட்டச் செய்கையில் ஈடுபடுவான் என்ற இவரது கூற்று நிறைவேறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்னும், தமிழீழப் புலவர் ஒருவர் தின்னத் தமிழ் வேண்டும்; தின்று தமிழாலே சாகவேண்டும்; சாவிலும் தமிழ்படித்துச் சாகவேண்டும்; செத்தெரிந்த சாம்பலிலும் தமிழ் மணமே கமழ வேண்டும். என்று தனக்கு தமிழால நெஞ்சில் வந்த ஆராமையைச் சொல்லிச் சொல்லி இரங்குகிறார்.

''தின்னத் தமிழெனக்கு வேணு மேயடா - தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணு மேயடா!
''சாவில் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்!''
(-பண்டிதர் க. சச்சிதானந்தன; ஆனைக்கோட்டை)

மேலும், ஈழத்துப் புரட்சிக்கவி காசி ஆனந்தன் அவர்கள்,

''பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் – ''மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனா?'' என்று உள்ளம் குமுறுகிறார்.

''இன்னமு தோதெளி தேனோ - என
எஞ்செவிக் கினிக்கின்ற மொழியெது தானோ
அன்னை மொழிதனை நாமோ – வெறுத்
தருவருத் தவமதித் திடலழ காமோ?'' என்று எங்கள் தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர், தமிழின் அவலநிலை கண்டிரங்கி, தமிழ்காக்க தன்மானமுள்ளவர் வருக என்று வேண்டி அழைக்கிறார்.

ஔவை வேண்டியதும் சங்கத் தமிழே! அந்தோ! இவையெல்லாம் பாட்டி சொல்லும் பழங்கதையாயினவே! இன்று நாங்கள் கோலிழந்து - கொடியிழந்து கோழைகளாய் கூனிக் குறுகி கும்பிட்டு எதிரியின் தாள்வருடி எச்சிற் சோற்றுக்கு இரக்கும் கீழ்நிலையில் வீழ்ந்து விட்டோம! மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் ஓர் பெருமையில்லை! தன்மானமும் தமிழ்வாழ்வும் வேணடுமோயின் மீண்டும் நாங்கள் களமாடவேண்டும்! ஆளும் மொழிதான் வாழும்; அடிமைப் பட்டமொழி மாளும்! எங்கள் மொழி வாழ – நாம் வாழ இழந்த முடியைப் பெற்றாக வேண்டும்!

''சோறுண்ண வழிதேடி விடுதலையை விற்பவர் கற்பதென்ன?'' என்று பொங்கி எழுந்தவர் – இனமானம் இன்னும் ஒழியாத மறவர் களமாடுகின்றார்; தற்கொடையால் தமிழ் மானத்தையும் தமிழினத்தையும் காத்து நிற்போம.

## கம்பியூட்டரில் தமிழ்

தற்போது கணணிப்பொறியிலும் (கம்பியூட்டரிலும்) தமிழ் புகுந்து விட்டது. வீரகேசரி பத்திரிகை கூட கம்பியூட்டர் பதிப்பில் வெளிவரத் தொடங்கி விட்டது. இதன் ஆரம்பம் பற்றி நீங்களும் கொஞ்சம் அறிந்து கொள்ளுங்கள்.


முதன் முதலில் 1985ல் அமெரிக்கா பேராசிரியரான ஜோர்ஜ்கௌஈரா என்பவர் தமிழ்மொழியில் உள்ள பற்றின் காரணமாக தமிழ் கற்று கப்பியூட்டரில் தமிழை அறிமுகம் செய்தார். இவர் திருமணம் செய்தது ஒரு இலங்கைத்தமிழ்ப் பெண்ணை. கணணி எழுத்துக்கள் அமெரிக்காவில் இந்தியத்தமிழர் ஒருவரால் அறிமுகம் செய்யப்பட்டன. பின்னர் கனடாவில் அச்சுக்கூடம் வைத்து நடாத்தும் இலங்கை எழுத்தாளரான ஈழத்துப் பூராடனாரின் மகன் தனது அச்சுக் கூடத்தில் கம்பியூட்டர் மூலம் அச்சிடத்தொடங்கினார்.

இதுவே தமிழில் கம்பியூட்டர் துறையின் ஆரம்பம். இன்று வெளிநாடுகள் பலவற்றிலும் பல பத்திரிகைகள் சஞ்சிகைகள் கம்பியூட்டர் மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன.

கம்பியூட்டர் அச்சு மூலம் சொற்ப நேரத்தில் நாம் விரும்பியவற்றை அச்சிட்டுக்கொள்ளலாம். சாதாரண அச்சுயந்திரத்தைப் போன்று எழுத்துக்களைக் கோர்த்து நேரத்தை செலவிடத் தேவையில்லை. அத்துடன் மிகவும் தெளிவாகவும் அழகாகவும் கம்பியூட்டர் மூலம் நாம் விரும்பியவாறு அச்சிட்டுக்கொள்ளலாம்.

— ந , பரமேஸ்வரன்

## குறள் வெள்ளம்



### நா காக்க

பேச்சினிலே அடக்கம் அமைதி வேண்டும், பேச்சு பல்லக்கு தம்பி கால் நடை என்ற நிலமை இருக்கக்கூடாது. பெரிய சாதனையாளராக வாய்ப் பேச்சில் நடிக்க வேண்டாம். ஆரவார மில்லாத செயலில் திறமை தெரியட்டும்.

அடுத்தவனைப் பற்றி தேவையில்லாத பொல்லாப்பு பழி சொல்ல வேண்டாம். இல்லாத இடத்தில் ஒருவரைப்பற்றி புறங்கூறித் திரிதல் ஆகாது

இதனால் சொல் இழுக்குப்பட்டு (குற்றப்பட்டு) சோகத்தை, துயரத்தை தழுவ வேண்டாம்.

எதிலே கவனமில்லாமல் இருந்தாலும், எதைக் காக்காத போதும் (யா காவாராயினும்) நா காக்க. பேசும்போது ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து நன்மை, தீமைகளை ஆராய்ந்து பார்த்தே வார்த்தைகளை வெளியிடல் வேண்டும.

''யாகாவா ராயினும் நா காக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''

— 0217
(அடக்கமுடைமை)

# “அரசமரத்தின் கதை”

— எம். இ. யோகேந்திரம் —

1978 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் நிலவு தேயும் வேளை! கிளிவெட்டி ஊர் இரகசியமான சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. மூதூர் பிரதேசத்தில் அமைந்து தன் சுற்றுப்புறமெங்கும் வரப்பு நீர் சூழ்ந்த தான் கிளிவெட்டி ஊர். அங்குள்ள அம்மன் கோயில் வளவில் ஓர் அரசமரம் அரை நூற்றாண்டு காலமாக வேர்விட்டு பரந்து வளர்ந்திருந்தது.

ஏலவே 1956 ஆம் ஆண்டின் அல்லைக் குடியேற்றத்தின் கீழ் படிப்படியாகக் குடியேறிய இரண்டாயிரத்துக்கும் மேலான சிங்களக் குடும்பங்களை ஊர் ஊராக வகைப்படுத்தி மகா நுவர, லங்காபட்டுன, அலிஒலுவ, தெகிவத்தை என்று அழைத்தது மட்டுமன்றி, தனித்தமிழ் ஊரான கிளிவெட்டிக்கு கிரிபட்டி என்ற பெயரிட்டும் அழைத்துக் கொண்டனர் சிங்கள மேலாளர்களும், சிங்களவர்களும்.

இந் நடவடிக்கைகளுக்கு களமாயும் கோலாயும் அப்புகாமி, மார்ட்டீன் என்பவர்கள் அவ்வூரில் இருந்தனர். மார்ட்டீன் ஆரம்பத்தில் வெற்றிலைத்தட்டு வைத்து வியாபாரம் செய்து படிப்படியாகப் பலசரக்கு முதலாளியாகவும், திடீர் சாவுவிசாரணை மேலாளராகவும் மாறிவந்தான். அப்புகாமியோ சாராயம் விற்று வந்தான். இவ்விருவரின் வீட்டிற்கும் சிங்கள காவல்துறை மேலாளர்கள் வாகன சகிதம் வருவதும் போவதுமாய் இருப்பது வழக்கம். கோயிலின் அருகில் வீடும், கடையும் வைத்திருந்த மார்ட்டீன் கோயில் வளவிலுள்ள அரசமரத்தை பௌத்த மதத்தோடு பிணைத்தான். புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினரைக்கொண்டு ஆலய வளவை அகழ்வதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டன.

சிங்களம் மட்டும் அரசமொழி, பௌத்தம் அரச மதம், அரசமரம் அரசின் புனித சின்னம் என்ற அரசியற் சட்டத்தினை சிங்கள அரசு தமிழ் மக்களின் மீது திணித்துக் கொண்டிருந்த இக்காலத்தே தமிழீழ இளைஞர்களின் தீவிர மன உணர்வுடன் ஒன்றாது தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப் பீடம் பிணங்கிக் கொண்டிருந்த வேளையில் முருங்கனில் பஸ்தியாம்பிள்ளையுடன் காவல்துறையினர் சிலர் புதையுண்டதையும், காவல்துறை மேலாளர் பத்மநாதன் யாழ்ப்பாணத்தில் கொலைப்பட்டதையும் நாளிதள்கள் மூலம் அறிந்து மகிழ்ந்திருந்த இவ்வூர் இளைஞர்களின் மனதில் அரசமரமும், அப்புகாமிகளும் எதிர்கால ஆபத்துக்குறிகளாகியதில் வியப்பு ஏதும் இல்லை.

ஊருக்குள்ளிருந்துகொண்டு அப்புகாமியும், மார்ட்டீனும் காவல்துறையினரின் துணையோடு மக்களின் அமைதியைக் குலைத்தவண்ணம் இருந்தனர். புத்தர் சிலை ஒன்றைக் கொண்டுவருவதும் அப்புகாமியின் காணியில் சிறிய பன்சலை (பௌத்த வழிபாட்டு இடம்) கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்வதற்குமாக மார்ட்டீனும் அப்புகாமியும் அரசோடு தொடர்பு கொண்டனர் இவைகள் நடைபெறுவதற்கு இரு திங்களுக்கு முன்னர் கிளிவெட்டி மக்கள் தினமும் சென்று வருகின்ற பூர்வீகச் சிறப்புற்ற கங்குவேலிச் சிவன் ஆலயமும், விளை நிலங்களில் அமைந்திருந்த நெற்சூடுகளுடன் வீடுகளும், சிங்களவரால் எரிக்கப்பட்ட நிலையில் கங்குவேலி மக்கள் புலம் பெயர்ந்து துயர்பட்டிருந்தனர் ... இவ்வாறு கங்குவேலியின் துன்பக்கதை நடந்து கொண்டிருந்த வேளையில் கிளிவெட்டியில் சீவியம் செய்து வந்த அப்புகாமியும், அவன் மனைவியும் கந்தப்போடியினால் கொலை செய்யப்பட்டனர். சிங்களவர்களுக்கு எதிரான போக்குடைய கந்தப்போடியினால் ஏற்பட்ட இந் நிகழ்ச்சி தொடர்பாக 16 4 1978ல் மூதூர் தொகுதியின் தேசியப் பேரவை உறுப்பினராக இருந்த அ. தங்கத்துரை சந்தேகத்தின் பேரில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிகழ்வும் மக்களின் இனமான உணர்வைக் கிளறியது.


இத்தருணத்தில் தான் அந்தச் சிறப்பான வைகாசி இருள் விடிவதற்கு முன்னால் நூற்றுக்கணக்கான மக்கள் கிளிவெட்டி ஆலய வளவில் ஒன்றாகினர் கத்திகளுடன், கோடரிகள் இருளில் மின்னின. வேர்விட்டு விரிந்துநின்ற வெள்ளரசு மரத்தின் கீழே குமாரதுரை, கிருபைராசா, நவரெட்ணம், சித்திரவேல் ஆகியோர் கட்டளையை இட்டவாறு வேலையைத் தொடங்கினர். ஒரே இரவில் சரிக்கப்பட்ட மரத்தின் கிளைகளும் ஆற்றோடு கலந்தன.

மறுநாள் புலருமுன்னமே சாவுவிசாரணை மேலாளர் மார்ட்டீன் தன் குடும்பத்தோடு ஊரைவிட்டு வெளியேறியது போலவே, வெள்ளரசு மரங்களும் தொடர்ந்து இம்மாவட்ட மண்ணில் வீழ்ந்தன.

(உண்மை நிகழ்ச்சி)

# மன ஊனமற்ற மனிதர்

"உடல் ஊனமுற்றோர் சமூகத்தில் பெரும்பாலானோரினால் புறக்கணிக்கப்படும் நிலை இருக்கிறது இப்புறக்கணிப்புகளுக்கு சவாலாக தன்னம்பிக்கையுடன் இவர்கள் வாழ்ந்துகாட்டவேண்டும். என்னைப் பொறுத்தமட்டில் இப்படித்தான் வாழ்கிறேன். பிறரின் கைகளில் தங்கியிராது நானாக உழைத்தே என் வாழ்நாளைக்கொண்டு நடத்துகிறேன். இப்போது எனக்கு ஐம்பத்திரண்டு வயதாகிறது. இன்று வரை எனது சொந்தக்கால்களிலேயே நிற்கிறேன்."



ஒரு வயதாக இருக்கும் போது ஏற்பட்டபோலியோ நோயினால் நடக்கும் சக்தியற்று கால்கள் சூம்பிப் போன நிலையில் முச்சக்கரவண்டியில் அமர்ந்தபடி இப்படிக்கூறினார். அந்தமனிதர். அவரின் பெயர் திரு. அரியக்குட்டி குணசிங்கம். க பொ. த. சாதாரணம் வரை கல்விகற்றுள்ளார். அச்சுவேலியை சொந்த ஊராகக் கொண்டவர். ஏழு சகோதரர்கள் அவர்களில் இருவர் ஊமை. இன்னொருவருக்கு கேட்கும் சக்தி இல்லை.

ஒருசிலரின் ஒத்துழைப்புடன் அங்கவீனர் புனர்வாழ்வுச்சங்கம் என்ற பெயரில் அமைப்பொன்றினை ஏற்படுத்தி அதன் தலைவராகவும் பணிபுரியும் திரு. குணசிங்கம் சுறுசுறுப்புடன் தனது வேலைகளைத் தாமாகவே செய்து வருகிறார். கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குளித்தல், உடைகளைக் கழுவுதல் போன்றவற்றைக்கூட இன்னொருவரின் உதவியை நாடாது தாமாகவே செய்து கொள்கிறார்.

பழைய பேப்பர்களை வாங்கிவிற்றல், தமது சங்கத்தின் கைத்தொழில் முயற்சியினால் தயாரான தும்புத்தடி, விளக்குமாறு போன்ற பொருட்களை கடைகளிற்கு எடுத்துச்செல்லல், மாம்பழம், பலாப்பழம் போன்ற பழங்களை உற்பத்தியாளர்களிடம் வாங்கி கடைகளில் வீடுகளில் சென்று வியாபாரம் செய்தல் ஆகியன இவரது தொழில்களாகும்.

இதன் மூலம் தனது வாழ்க்கைச் செலவிற்கான பணத்தினை உழைப்பதுடன், வாய் பேசமுடியாத தனது சகோதரருக்கும் முடிந்தவரை இவர் உதவி செய்து வருகிறார்.

→ "நான் எனது சொந்தக் கால்களிலேயே நிற்கிறேன்"

ஊனமுற்றோரை சமூகம் புறக்கணிக்கிறது என்பதை அனுபவபூர்வமாக நீங்கள் கண்டிருப்பீர்கள். அந்நேரங்களில் வேதனைப்படுவதுண்டா என நாம் அவரைக் கேட்டபோது. அவர் சொன்னார்:-

"சுமார் பத்துவீதமானோர் எம் போன்றவர்களுடன் அன்போடும் அனுதாபத்துடனும் நடந்து கொள்கின்றனர். ஏனையோர் எம்மை அவ்வளவாக ஏற்றுக் கொள்வதில்லை சமூகத்திலுள்ள மூடநம்பிக்கைகளும் இதற்கு காரணமாக அமைகின்றன. திருமணம்போன்ற நல்ல காரியங்கள் நடக்கும் இடத்தில் ஊனமுற்றோர் இருப்பது ஓர் அபசகுனம் என கருதப்படுகிறது சில திருமண வீடுகளில் மணமக்கள் வரும்போது எம்மை அவர்களுக்கு முன்னால் நிற்க வேண்டாம் எனக் கூறுவார்கள். இப்படியான வேளைகளில் மனம் மிகுந்த வேதனைக்குள்ளாகும்.

சிலர் தாங்கள் பயணம் செல்லும் வழியில் ஊனமுற்றோரைக் கண்டுவிட்டால், அருவருப்புடன் பார்வையைச் செலுத்தி முணுமுணுக்கிறார்கள் சொந்த மண்ணைவிட்டு பயம் காரணமாக கொழும்புக்கும்,

வெளிநாட்டிற்கும் ஓடுப்வர்கள், கூட வீட்டை விட்டு வெளிக்கிடும்போது எம்மைக் கண்டுவிடடால் அபசகுனம் என தலையிலடித்துக் கொள்வதை என் அனுபவத்திலேயே நான் கண்டு எனக்குள் சிரித்துக் கொண்டதுண்டு.

ஒருசில அன்பர்கள் தங்கள் திருமண வீட்டிற்கு என்னை அழைத்து தங்களோடு நிற்கவைத்து புகைப்படங்கள் கூட எடுத்திருக்கின்றார்கள். இவர்களைப் போன்றோர் மூட நம்பிக்கைகளை உடைத்தெறிபவர்களாகவுள்ளனர்.''

## உங்கள்மீது மற்றவர்கள் அனுதாபம் காட்டுவதை விரும்புகிறீர்களா?

அனுதாபம் காட்டுவதை விட எம்மில் நம்பிக்கை வைப்பதையும், நாமும் மனிதர்கள்தாம் என்பதை அவர் உணரவேண்டும் என்பதையும்தான் நான் விரும்புகிறேன். எமது சங்கத்தினால் தும்புத்தடி, விளக்குமாறு என்பன தயாரிக்கின்றோம். அவைகளின் தரத்தினைப் பார்த்துவிட்டு எவரும் வாங்குவதைத்தான் நான் விரும்புகிறேன். அனுதாபத்திற்காக வாங்குவது அடுத்த விடயம். நான் வியாபாரவிடயமாக சிலவீடுகளுக்குச் செல்லும்போது அவர்கள் என்னைக்கண்டு விட்டு வீட்டினுள், பல இடங்களில் தேடிப்பிடித்து சில சில்லறைக்காசுகளை எனக்குத்தர முற்படுவதுண்டு. இப்படியான வேளைகளில் நான் எனது பையிற்குள்ளிருந்து ஆயிரம் ரூபா நோட்டை எடுத்து, உங்களிடம் மாம்பழம் இருக்கிறதா? பலாப்பழம் இருக்கிறதா? என்று வியாபாரம் பேசுவேன். அப்போது அவர்களின் முகங்கள் ஆச்சரியத்தாலும் அவமானத்தாலும் நிறம் மாறிவிடுவதுண்டு இதனை ஏன் சொல்கிறேன் என்றால், ஊனமுற்றோர் என்றாலே அவர்கள் இரந்துண்டு வாழ்பவர்கள் என்கிற பார்வை சமூகத்திலிருந்து மறையவேண்டும் என்பதற்காகத்தான்.

## இங்கே ஊனமுற்றோருக்கான உதவிபுரியும் நிறுவனங்கள் உள்ளன. அவை போதிய அளவு உதவுகின்றனவா?

ஓரளவிற்கு உதவிகள் செய்கின்றன. இருப்பினும் அவை ஊனமுற்றோருக்கான நிறைவான உதவிகளை சேவைகளை செய்வதில்லை. வடக்கில் அங்கவீனர்களுக்கான முழுமையான வசதிகள் கொண்ட சேவை நிலையம் ஒன்று உருவாக வேண்டும் என்பது எனது ஆசை. இவ்வாறான நிறுவனங்களை நடத்துவோருக்கு சமூகத்தில் ஓர் அந்தஸ்து ஏற்படுகிறது. இப்படி சமூக அந்தஸ்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் இவ்வாறான நிறுவனங்களை நடத்துபவர்கள் செயல்படாமல் ஊனமுற்றோரை சமூகத்தில் மேம்படுத்துவதற்காக உண்மையுடன் அவர்கள் செயல்பட வேண்டும்.

## உங்களைப்போல் ஊனமுற்ற நிலையிலுள்ள ஏனையோருக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

அவர்கள் தங்களின் நிலைகுறித்து விரக்தியடையக்கூடாது. வாழ்க்கையை ஓர் சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்னொருவரை நம்பி வாழாது உழைத்து வாழ முற்பட வேண்டும். சொந்தக்காலில் நிற்கவேண்டும்.

திரு. குணசிங்கம் அவர்கள் பேசும்போது 'சொந்தக்காலில் நிற்கவேண்டும்' என்கிற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகிறார். அப்போதெல்லாம் என்னுடைய பார்வை சூம்பிப்போன அவரது கால்களை நோக்கித் திரும்பும். நம்பிக்கையையும், உழைப்பையுமே சொந்தக்கால்கள் என அவர் கருதுகிறார் என்பதை உணரக்கூடியதாகவுள்ளது

உடல் ஊனமின்றி இருந்தாலும் வாழ்வில் இடர்களுக்கும், துன்பங்களுக்கும் முகம் கொடுக்க முடியாமல், விரக்தியுற்ற நிலையில் மன ஊனமுற்று நடமாடும் பலரை நாம் பார்க்கிறோம். உடல் ஊனமுற்ற நிலையிலும் மன ஆரோக்கியத்துடனும் தன்னம்பிக்கையுடனும் வாழும் இவர் ஒரு வித்தியாசமானவராகவும் மற்றவர்களுக்கு உதாரணத்திற்குரியவராகவும் திகழ்கிறார். போர்ச்சூழலும், பொருளாதார நெருக்கடிகளும் கூட எந்தவித சோர்வையும் இவரிடம் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

— விவேக்

## கரோசி [Karoshi]

கரோசி என்ற யப்பானிய சொல்லுக்கு பொருள் 'வேலை அதிகம் செய்வதால் ஏற்படும் சாவு' என்பதாகும். ஒரு மனிதன் உணவின்றி சாவதை பார்த்திருக்கின்றோம்.

ஒரு வேலையும் செய்யாமால் உண்டு, உண்டு சாவதையும் பார்த்திருக்கின்றோம். அதே போல் அதிகமாக வேலை செய்வதாலும் மனிதன் சாகின்றான்.

யப்பானில் இன்று இச்சாவுகள் பெரும் சிக்கலை தோற்றுவிக்கின்றன.

ஆண்டொன்றுக்கு 10,000 யப்பானிய தொழிலாளிகள் இந்நோயால் சாவதாக கூறுகின்றார்கள்.

ஒரு அமெரிக்க தொழிலாளியிலும், யப்பானிய தொழிலாளி ஆண்டுக்கு 300மணி நேரமும், ஜெர்மனிய தொழிலாளியிலும் பார்க்க 550 மணிநேரமும் கூட வேலை செய்கின்றான்.

யப்பானிய தொழிலாளி ஆண்டொன்றுக்கு 2201 மணிநேரம் வேலை செய்வதாக 90ம் ஆண்டு ஜெர்மன் பொருளியல் நிறுவனம் கணிப்பிட்டது.

1997ம் ஆண்டளவில் வேலை நேரத்தை 1800 மணிநேரமாக்கும் முயற்சியில் யப்பானிய அரசு ஈடுபட்டுள்ளது.

# பாடசாலைகள் வளமானவையா?

—தளபதி—

யூலை - ஓகஸ்ட் சாளரம் சஞ்சிகையில் 'தனியார் கலவி நிறுவனங்கள்' என்ற தலைப்பில குமாரவேல் என்பவர் எழுதிய கட்டுரையில் அடங்கியுள்ள சில கருத்துக்கள் எனது பார்வையில் முரண்பாடுடையனவாக மட்டுமின்றி தவறானவையாகவும் தெரிகின்றன. சாளரத்தல் வெளியான அக்கட்டுரையின் இறுதியில் மாறான கருத்துக்கள் வரவேற்கப்பட்டிருந்ததுவும் எனது கருத்தைத் தெரிவிக்க முன்வரக் காரணமாகும்.

இதன்படி தனியார் கல்வி நிறுவனங்கள் என்ற தலைப்பிலான இக கடடுரையின் தொடக்கத்தில் பின்வருமாறு குறிடபிடப்பட்டிருந்தது. 'இன்று சமிழீழத்தில் குறிப்பாகக குடாநாட்டில் தனியார் கல்வி நிறுவனங்கள் பிரமிக்கத்தக்க வளர்ச்சியடைந்து கல்வி முறையில் ஒரு உறுப்பாக, பாடசாலைகளிற்கு ஒரு சவாலாகக் காணப்படுகின்றன.' ஆனால் ஆசிரியர் தனது கட்டுரையின் ஐந்தாவது பந்தியில் 'வளம் கொண்ட பாடசாலை தூங்கிவழிய வளமாற தனியார் நிறுவனக் கொட்டில்கள் நிரமபிவழிகின்றன' என்று குறிப்பிட்டிருந்தார். இங்கே ஆசிரியரால் குறிப்பிடப்படும் வளம்தான் என்ன?

எற்கனவே பாடசாலைகளிற்குச் சவாலாக, பிரமிக்சத்தக்க வகையில் தனியார் கல்வி நிலையங்கள் வளர்ச்சியடைந்தன எனசகூறும் ஆசிரியர் பின்னர், தனியார் கல்வி நிலையங்களில் எக்கட்டத்திலும் போதிப்பதில் தரக்குறைவு உண்டென்பதைச் சுட்டிக் காட்டவில்லை. உண்மையில் தனியார் கல்வி நிலையங்கள் இற்றைவரை கண்ட பிரமிக்கத்தக்க வளர்ச்சியின் பின்னால் பெரியதொரு உணமை மறைந்திருக்கின்றது. அதுதான் பாடசாலைகளில் உள்ள குறைபாடு. உண்மையில் முதலில் செய்யப்படவேண்டியது தனியார் கல்வி நிலையங்களின் குறைகளை நீக்குவதல்ல. பாடசாலைளைச் சீர்திருத்த வேண்டும். அவ்வாறு சீர்திருத்துவதனூடாக தனியார் கல்வி நிலையங்களை இல்லாதொழிக்கலாம். ஆசிரியர் கூறுவது போல பாடசாலைகள் வளம் கொண்டவை அல்ல. இன்று நகரப்பகுதிகளில் தலை நிமிர்ந்து நிற்கும் பாடசாலைகளில் சில வளங்கள் காணப்படுவதுபோல் தெரியலாம். ஆனால் சற்று அப்பால் சென்று பார்த்தால் வளம் சம்பந்தமான விடயத்தில் மீளாய்வு தேவைப்படுகின்றதென்பது தெரியவரும். இங்கு நான் குறிப்பிடும் வளம் என்பது கல்வி உட்பட நூல்நிலையம், மலசலக்கூடம்,

கூடம், சைக்கிள் நிறுத்துமிடம் போன்ற இன்னோரன்னவற்றை சுட்டி நிற்பதாகும். இவ்வாறான வளங்களை எமது பகுதிப் பாடசாலைகள் அனைத்தும் பெற்றிருக்கின்றனவா? என்பது கேள்விக்குறி.

இது தவிர பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்கள் தமது விசுவாசத்தை வெளிக்காட்டுவதில்லை அல்லது தமது திறமையை வெளிக்காட்டுவதில்லை. காரணம் அவர்கள் தமது முழுத்திறமையையும் வெளிக்காட்ட தனியார் கல்வி நிலையம் என்ற தளம் இருப்பதினாலேயே ஆகும். ஆகவே, ஒரு ஆசிரியர் தனது திறமையைக்காட்டக்கூடிய தளம் ஒன்றாக இருக்கவேண்டும். அது பாடசாலையாக இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் பாடசாலை வளமாகும். இதனால் தனியார் கல்வி நிலையங்கள் தானாகச் செயலிழந்து போகும். இன்று தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களிடம் தாம் கல்வி கற்பிக்கும் பாடத்தில் தெளிவு இருக்கின்றதென்பதை விட தமது கவர்ச்சியினால் (அச்சடித்த குறிப்புக்கள், உரத்த குரலில் கத்துதல்) தவறான கருத்துக்களையும் மாணவன் மனதில் பதியவைப்பதில் முன்னிற்கின்றனர்.

தாம் கற்பிக்கும் துறையில் எந்த விதமான சிறப்புத் தேர்ச்சியும் இல்லாமல் சில ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியராக இருப்பது எமது பகுதியில் மலிந்துவிட்ட தொன்றாகும். இவ்வாறான இன்னபிற குறைபாடுகளைக் கொண்டியங்குவதனூடாக மாணவர்களின் கல்விக்கே சவாலாக இருக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைகளிற்கு சவாலாக வளர்வது எங்ஙனம்?

தனியார் கல்வி நிறுவனங்கள் என்ற கட்டுரையில் கூறப்பட்ட "பாலர் வகுப்பிலே ரியூட்டரி என்ற நிலை நீக்கப்படவேண்டும்" என்ற கருத்தும் எனக்கு முரண்பாடுடையது. ஒரு மாணவன் அல்லது மாணவி தனது ஐந்தாவது வகுப்பில் எடுக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு சிறு வயதிலிருந்தே தன்னைத் தயார்படுத்திக் கொள்ளாவிடத்து அது ஒரு பாடசாலை அனுமதியைப் பெறுவதற்கு ஒரு சவாலாகவும் காணப்படுகின்றது. இதனால் பாலர் வகுப்பிலே ரியூட்டறி என்ற நிலை நீக்கப்படுமிடத்து ஒரு முதலாளித்துவத்தை வளர்க்கும் செயலாக மாறுவது தவிர்க்க முடியாததாகும். ஏனெனில் வசதி படைத்தவர்களின் பிள்ளைகளிற்கு வீட்டில் சென்று கற்றுக்கொடுப்பதினூடாக வரையறுக்கப்பட்ட நேரத்திற்கு பெரும்பணம் உழைக்கும் ஆசிரியர்கள் எம்மத்தியில் இருக்கின்றார்கள்.

எனவே, முடிவாகக்கூறின் கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டதுபோல 'பாடசாலையில் ஏற்பட்ட ஒரு இடைவெளியை நீக்கத்தான் தனியார் கல்வி நிறுவனங்கள் வந்தன என்றால் பாடசாலையினால் ஏற்படுத்தப்பட்ட அந்த இடைவெளி ஏன்? எவ்வாறு? ஏற்பட்டது என்பதைக் கண்டறிவதனூடாக தனியார கல்விநிலையங்களை இல்லாதொழிக்கலாம். ஆகவே, இன்று எமது சமுதாயத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் குறைபாடுகளைக் கண்டறிந்து சீர்திருத்துவதைவிட பாடசாலைகளின் குறைபாடுகளை முதற்கண் கண்டறிந்து சீர்திருத்த ஆய்வுவேண்டியது அவசியமானதாம்.

**என்ன பொருள் வேண்டும்?**

**'பான்சி குட்ஸ்'**
**'எவர் சில்வர்'**
**'பிளாஸ்ரிக்' பொருட்கள்**
**இன்னும் பலவித அன்பளிப்புப் பொருட்கள்**

எம்மிடம் வாருங்கள் !

அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

# லக்ஸ்மி றேட் சென்ரர்

**சுப்பிரமணியம் வீதி — சுன்னாகம்**

---

**நியாய விலையில்**
**உங்கள் தேவைக்கேற்ற பொருட்கள்**
**எம்மிடம் கிடைக்கும்**

**'பிளாஸ்ரிக்' பொருட்கள்**
**சாய்ப்புச் சாமான்கள்**
**பலசரக்கு சாமான்கள்**

# அம்பாள் ஸ்ரேர்ஸ்

**வல்லை வீதி, — சங்கானை.**

தெறிப்பு

## உண்மை நிலையை எடுத்துக் கூறி விட்டது!

சாளரத்தின் கடந்த இதழ் மிகவும் சிறப்பாக, புதிய பார்வையில் அமைந்திருந்தது. 'தகவல் குவியல்' என்னும் புதிய பகுதியை கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். அதனை தவறாது ஒவ்வொரு இதழிலும் வெளியிடுங்கள். 'தனியார் கல்வி நிறுவனங்கள் பற்றிய கட்டுரை அவற்றின் உண்மை நிலையை எடுத்துக் கூறிவிட்டது. கட்டம் இட்டு வந்த கருத்துக்கள் அனைத்தும் நன்றாக இருந்தது. மற்றும் கட்டுரைகள், கதை அனைத்தும் நன்றாக இருந்தன.

— சி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை

## பலரை ஏன் குறிப்பிடவில்லை?

எங்கள் மண், எங்கள் எழுத்தாளர், எங்கள் நூல்கள் என்ற கட்டுரையினைப் படித்துப் பார்த்தேன். எழுதியவரின் கருத்துக்கள் கவனிக்கப் படத்தக்கன. ... ஆனால், புனைகதை எழுத்தாளர்களுள் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், ஞானதரன், சாந்தன், சட்டநாதன் முதலிய பலரை (இவர்கள் ஈழத்து புனைகதைத் துறையில் குறிப்பிடப்படவேண்டியவர்கள்) அவர் குறிப்பிட்டுக் காட்டவில்லை. அதேபோல பல கவிஞர்களும் குறிப்பிடப்படவில்லை.

— ம மதனன்,
மல்லாகம்.

❁ *முக்கியமான எழுத்தாளர், கவிஞர்களில் இன்றைய இளையோருக்கு அதிகம் தெரியாதவர்கள் என்ற ரீதியலதான் சிலரை கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். தாங்கள் குறிப்பிட்டுள்ள எழுத்தாளர், கவிஞர்களை இன்று பலருக்கும் நன்கு தெரியும். அதனாலேயே குறிப்பிடப்படாமல்விட்டிருக்கலாம்.*

— ஆசிரியர்குழு

## தெரியாத விடயங்கள் வெளிவருகின்றன

சாளரம் சஞ்சிகையைத் தொடர்ந்து படித்து வருகின்றேன் சாளரம் எமக்கு ஒரு அறிவுப் பொக்கிசமாகும். சாளரத்தில் எமக்குத் தெரியாத விடயங்கள் வெளிவருகின்றன. சாளரத்தின் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

— இ. சிவகுமாரன்
நெடியகாடு
வல்வெட்டித்துறை

## நெஞ்சம் மலர்ந்தது!

சாளரம் யூலை - ஆகஸ்ட் இதழை கையில் எடுத்தபோதே நெஞ்சம் மலர்ந்தது. வெளி அட்டையிலிருந்து உள் விடயங்கள் வரை யாவிலும் ஒரு திருப்பம், திருத்தம், அமைப்பு அழகு, பெறுமதி எல்லாம் இருந்தன. என் மனமார்ந்த பாராட்டுக்கள். உண்மையாக இந்த முகப்புப் படத்தில் கற்பனை நயம், கலைத்திறன், மென்மையுணர்வு, கருத்துயர்வு யாவும் இருந்தன. கவிதை வரிகளும் ஏற்ற சிறப்புடன் நிற்கின்றன.

பக்கம் 16, 20, 22 இலும் ஏதேனும் சிறு துணுக்குகளைச் சேர்த்து சிறப்பித்திருக்கலாம். ஒருபக்கத்தில் ஒரு தனிக் கட்டுரையோ, கவிதையோ வரலாம். ஆனால், தொடர்ச்சிகள் தலைப்போ குறிப்போ இன்றி முழுப்பக்கத்தை எடுத்தலாகாது. இவைவெறும் அச்சுக்குவியல் போல் காட்சிதரும்.

'தனியார் கல்வி நிறுவனங்கள், கட்டுரை விடயத்தால் மட்டுமன்றி, அதன் வார்த்தைப் பிரயோகத்தாலும் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகத் தோன்றுகிறது. கட்டுரையில் தேவையான பல கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும், அவற்றில் 'புரையோடிப்போயிருக்கும் நாற்றங்கள், போன்ற வார்த்தைப் பிரயோகங்கள், வருமானத்தையிட்டு மேலதிக ஆத்திரம், தனிப்பிரசுரத்தாருக்குச்சரி இளையோர் இதழாகிய சாளரத்திற்குச் சரியல்ல.

— நாக. பத்மநாதன்

## எமது கல்வி நிறுவனங்கள் அப்படியல்ல

தனியார் கல்வி நிறுவனம் என்ற தலைப்பில் எழுதிய விமர்சனக் கட்டுரையின் கீழ் எழுதியவை அனைத்தும் யாழ்நகர் கல்வி நிறுவனங்களுக்கே பொருத்தமுடையவை. எமது தென்மராட்சிக் கல்வி நிறுவனங்களுக்கு பொருத்தமற்றவை. இங்கு 5 ம், 6 ம் பிரிவுகள் என்று தொடங்குவதில்லை இரண்டு, மூன்று அலகுகள் ஒரே வேளையில் தொடங்கி விட்டு ஒவ்வொரு அலகிற்கும் 25 /= வீதம் வாங்கப்படுவதில்லை. ஒரு வகுப்பு ஒரு மணித்தியாலத்திலும் குறைவாக கற்பிக்கப்படுவதில்லை. ஒரு மாதம் 25/ மட்டுமே அறவிடப்படுகிறது. வசதியற்ற மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பிக்கப்படுகிறது. அவர்களும் மற்றைய மாணவர்களைப்போலவே கவனிக்கப்படுகின்றனர். அக்கட்டுரையில் ஒரு இடத்தில் 'இதனை எந்த ஒரு கல்வி நிறுவனங்களுமே மறுக்க முடியாது' என்று ஒரு வசனம் பொறிக்கப்பட்டிருந்தது. அதனை நாம் மிகவும் கண்டிப்பாக எதிர்க்கிறோம். 'ஒரு சில கல்வி நிறுவனம்' என்று குறிப்பிட்டிருக்கலாம்.

— தென்மராட்சி கல்வி நிறுவன மாணவர்கள்.

# அரும்புகள்

## நங்கையீர் வாரீர்

திரௌபதை மானம் காத்திடக் கண்ணன்
பாரதக்கதையிலே பக்கமாய் வந்தான்
தேடுதல் வேட்டையில் அகப்பட்ட மான்கள்
துயரினைத் துடைக்க எவரிங்கு வந்தார்
விம்மி அழுதிடும் பிஞ்சு மனங்களை
வாழ்வு கொடுத்து தேற்றலும் வீரமே!

உலகின் பாதி பெண்களானாலும்
சுதந்திரம் என்பது பெண்களுக்கில்லையே?
தாலியும் வேலியும் இடையினில் வந்தது.
நாணமும் அச்சமும் நாய்கட்கு உகந்தது
எத்தனை காலம் பழமையினால் அழிவது
நவயுகம் காண நங்கையீர் வாரீர்.

— ஞானசிலி நீக்கிலான்
வாழ்க்கைப் பெற்றான் கண்டல்,
முருங்கன்,
மன்னார்.

## சினத்துச் சகடை

ஓங்கிய வானிடைப் பறந்து
ஒலிதனை எழுப்பி
தூங்கிடும் மக்கள் மழலைகள்
துயில்தனைக் கலைத்து
ஏங்கியவர் நித்தம் அழுதிடச்
செய்து
தூங்கிய இளம் பிஞ்சுகள்
வரை உயிர்குடித்து
'நாங்கி' காட்டித் திரிந்த
சினத்துச் சகடை
தூங்கிடா விழிகளோடு தன்
குறியினைக் காத்து
ஓங்கியே நின்ற புலி வீரனின்
துப்பாக்கிக் குண்டினால்
தாங்கி வெடித்து வானில்
தகர்ந்து சிதைந்தது இன்று.

— அகிலா பசுபதி
இல 41, இராசவீதி,
கல்வியங்காடு,
நல்லூர்.

## எம் தமிழே!

கம்பன் கவி தந்தான்
இளங்கோ சிலம்பு தந்தான்
வள்ளுவனோ வான் புகழ்ப்
பொதுமறையைத் தந்தானே!

உன் புகழைப் பாடுதற்கு
என்னுள்ளம் துடிக்கின்றது
என் சிந்தை கவர்ந்தவளே
கன்னித் தமிழமுதே!
கரை காணாக் கடல் போல
கருத்தாழம் மிக்கவளே!
கன்னித் தமிழே! உனைக்
கரந்தூக்கி வணங்குகின்றேன்.

— க. பிரமதீஸ்வரி.
அல்லையூர்,

## ஓவியவாக்கியம் பதில்

பயணத்தை உள்ளம் சொல்ல
பாதையைக் கால்கள் கவர
உண்மையின் உச்சம் நோக்கி
உறுதியைக் கையில் ஏந்தி
நினைவுகளைச் சுவாலையாக்கி
நடக்கிறாள் இந்த நங்கை!

— க. ரட்ணேஷ்,
மானிப்பாய்.

## முட்டாளும் அறிவாளியும்

வீட்டிற்கு விருந்தினராக வந்த பெரியவர். அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைப் பார்த்து, ''முட்டாளுக்கும் அறிவாளிக்கும் என்ன வித்தியாசம்?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரியாது?'' என்றான் சிறுவன்.

''முட்டாள் எதையும் உறுதியாகச் சொல்வான் ஆனால் அறிவாளி எதையும் சந்தேகமாகத்தான் சொல்வான். அதுதான வித்தியாசம்'' என்றார் பெரியவர்.

''நீங்கள் இதை உறுதியாகச் சொல்லுகிறீர்களா? சந்தேகமாகச் சொல்கிறீர்களா? என்று கேட்டான் சிறுவன்.

மிகவும் உறுதியாகச் சொல்கிறேன் என்றார் பெரியவா.

# உலகின் தலைசிறந்த கல்விக் கூடங்கள் பத்து

முழுமையான கல்வியை தமது இளைய தலைமுறைக்கு வழங்கவேண்டும் என்பதில் அநேகமான நாடுகள் பெரும் கவனம் கொண்டுள்ளன. மாறும் காலகட்டத்தில் புதிய சூழலுக்கேற்ப தமது மாணவரைத் தயாரிக்க இவை பலவாகப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுகின்றன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளோ தாம் புதிதாகப் பின்பற்றும் திறந்த புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்ப மாணாக்கரைத் தயார் செய்யவேண்டியுள்ளது. யப்பானோ தனது மாணாக்கர் அமெரிக்காவில் செய்த ஆய்வுகளை விரிவாக்கம் செய்து பொருளீட்டும் முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்த்து தாமாக ஆய்வுகளை நிகழ்த்தி புதிய முறைகளை அறிமுகப்படுத்த வேண்டும் என விரும்புகிறது. அமெரிக்காவோ தனது மாணாக்கரை உயர்தொழில் நுட்பப் பதவிகளை வகிக்கத்தக்க வகையில் உருவாக்க விரும்புகிறது. இத்தகைய நிலையிலே உலகில் மிகச்சிறந்த கல்விக்கூடங்கள் தொடர்பாக 'நியூஸ்வீக்' சஞ்சிகை பெரும் ஆய்வொன்றை நடாத்தியது. முழுமையான கல்வித்திட்டம் என்று ஒன்று இல்லாவிட்டாலும் தனித் தனி துறைகளில் பாடங்களில் தலைசிறந்து விளங்கும் கல்விக்கூடங்களை, நாடுகளை அது உலகெங்கும் கண்டது. இத்தகைய கல்விக்கூடங்கள் பற்றிய பொதுவான சில அவதானிப்புகள் உண்டு. இத்தகைய வெற்றிகளுக்கு பணம் மாத்திரமே முக்கிய காரணியாக அமையவில்லை. அமெரிக்காவில் தனிமாணவனுக்கு அரசு செலழிக்கும் பணத்தில் 50% யப்பான் ஜெர்மனி போன்றவை குறைவாக செலவழிக்கின்றன. இருந்தும் அமெரிக்காவை விட இவ்விரு நாடுகளிலும் கல்வித் தரம் கூடவுள்ளது. அமெரிக்காவில் கட்டிடம் கட்டும் நிருவாகச் செலவிற்கும் அதிகபணம் வீணாகும். அதே சமயத்தில் இவ்விரு நாடுகளிலும் ஆசிரியர்பற்றி, அவர் வாழ்க்கைத் தரம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றன. சிறந்த திட்டமிடுதலும் ஆர்வமும் வெற்றிக்கு முக்கிய காரணிகளாகின்றன. இரண்டாம் உலகப் போரின் பின் தமது சமுதாயத்தை மட்டுமன்றி கல்வித் துறையையும் மீளாய்ந்த யப்பான், ஜெர்மனி, நெதர்லாந்து போன்றவை இன்று உலகின் தலைசிறந்த அறிவியல் மாணாக்கரைக் கொண்டுள்ளன. அத்தோடு கூடிய பாடசாலை நாட்கள் தொடர்ந்து தேர்ச்சியான (Consistance National Carriculam) தேசிய பாடத்திட்டம், ஆசிரியர் எதை எவ்வாறு கற்பிக்கவேண்டும் என்பது தொடர்பான மிகத் தெளிவான அறிவுறுத்தல்களும் அவற்றின் வெற்றிக்கு காரணமாகின்றன. உதாரணமாக அமெரிக்காவில் பாடசாலை நாட்கள் 180 ஆக இருக்கும்போது, யப்பானில் 240 நாட்களாகுதல் ஜெர்மனியில் 210 நாட்களாகுதல் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது கல்விக்கூடங்களில் ஆகக் கூடியநாட்கள் மாணாக்கரை வைத்திருத்தல் முக்கியமானதாக இரு நாடுகளிலும் கருதப்படுகிறது. தென் கொரியாவிலே உயர்கல்விக்கு ஆகக்கூடிய சமூகமதிப்பு அளிக்கப்படுகின்றது. 55% மாணவர் உயர்கல்விக்காக கல்லூரிகளில் சேர்வதாகத் தெரிகின்றது.

எவ்வாறானாலும் வெவ்வேறு நாடுகளின் வரலாறு, சமூக, பொருளாதாரப் பின்னணியில் உருவாகும் கல்வித்திட்டங்கள் சகல நாடுகட்கும் பொருத்தம் எனக் கூறமுடியாவிட்டாலும் இவற்றிலிருந்து சில அரிய முன்னுதாரணங்களை நாம் பெறமுடியும்.

> எழுத்தாளர்களே! யாருக்காகவோ போராடுகிறோம் என்று நினைக்காமல் 'உண்மைக்காகப் போராடுகிறோம்' என்ற உறுதியோடு உங்கள் பேனாவைத் தூக்குங்கள் அப்போதுதான் உங்கள் சிந்தனை பிரகாசிக்கும் பயன்தரும்.
>
> — எமிலி ஜோலா

### எழுத, வாசிப்பதில் சிறந்து விளங்கும் நியூசிலாந்து

அறிவின் அடிப்படை, வாசித்தல் என்ற வகையில் உலகிற்கே எடுத்துக்காட்டு நியூசிலாந்து. உலகநாடுகளின் தேர்வுகளில் இத்துறையில் இந்நாட்டு மாணவர்களே முதலிடம் பெறுகின்றனர். மற்றைய நாடுகள் தமது இளம் சிறார்களின் வாசிப்புத் திறனை அதிகரிக்க நியூசிலாந்தின் உதவியையே நாடுகின்றன. இங்கு அநேகமாக எல்லாப் பாடசாலைகளிலுமே மிகச் சிறு வயதிலிருந்தே வாசித்தலுக்கு மிகமுக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

* ஆரம்ப வகுப்புக்களில் 50% வகுப்பு நேரம் எழுத வாசித்தலுக்கு ஒதுக்கப் படுகின்றது.

* இளம் சிறார்களின் வாசிப்புக்கு ஏற்ப பொருத்த மான கதாபாத்திரங்களைக் கொண்ட புத்தகங்கள் தேர்ச்சியான ஆய்வுகளின் பின் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

* கடுமையான உச்சரிப்புப் பயிற்சிகளோ, தரப் படுத்திய தேர்வுகளோ கிடையாது பலதரப்பட்ட வயதுடைய மாணக்கர் பலரும் ஒன்றுசேர்ந்து ஒருவரை ஒருவர் நெறிப்படுத்தி அவரவர் விருப் பத்திற்கேற்ப வாசிப்பில் ஈடுபடுவர். மென்மேலும் வாசிக்கத் தூண்டுவதின் மூலமே வாசிப்பில் ஏற் படும் தவறுகள் நீக்கப்படும். தவறுவிடுவதால் சோர்வடையச்செய்யும் மனோ நிலை இங் கில்லை.

* தொடக்க வாசிப்பாளர், சரளமாக வாசிப்பவர் என இரு பிரிவாக வகைப்படுத்தப்பட்டு தகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் வழி நடாத்தப் படுகின்றனர்.

''தொடர்ந்து வாசிப்பதன் மூலமே நீர் வாசிக்கக் கற்றுக்கொள்கிறீர்'' என்பதே இவர்கள் வெற்றி யின் அடிப்படையாகின்றது
(You Learn to read by reading)

**பாலர் கல்வி - இத்தாலியில் உள்ள டயானா பாடசாலை.**

வடஇத்தாலி நகரான இறெயியோ எமிலியோ வில் உள்ள டயானா பாலர் கல்விக்கூடம் மிக வித்தி யாசமானது. இந்நகரில் உள்ள 3 வயது இளம் சிறா ரில் 90% இத்தகைய கல்விக்கூடங்களில் சேர்கின்றனர். இந் நகரத்தின் அனைத்துப் பெண்களும் ஒரு முன் மாதிரியான பாலர் கல்விக்கூடத்தை அமைக்க விரும்பி உழைத்து இதனை உருவாக்கியுள்ளனர்.

* டயானாப் பாடசாலையின் அமைப்பே வித்தியாச மானது. எங்குபார்த்தாலும் சிறாரின் கைவண் ணங்கள். மகிழ்ச்சி நிலவும் சூழ்நிலை, இங்கு மட் பாண்ட ஓடுகளால் செய்யப்பட்ட பலதரப்பட்ட மிருகவகைகள்; பயிர்கள், கண்ணாடி, மரங்கள் போன்றவற்றினைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட மனிதத் தோற்றங்கள் மாதிரித்தாவர இனங்கள், சிறார்கள் தம்மை உருமறைப்புச் செய்வதற்கான ஒப்பனை அறைகள், குழுக்களாக விளையாடுவ தற்கு, சிற்றுண்டி அருந்த தனித்தனி அறைகள். எனப் பலதரப்பட்ட வசதிகள் உண்டு.

* மிக இளவயதிலிருந்தே கல்வி ஆரம்பமாகின்றது. 3வயதுவரை- 3 தொடக்கம் வயதுவரை என இருபிரிவாக பாலர் பிரிக்கப்பட்டு அவரவர் விருப் பம் மனநிலைக்கு ஏற்ப பயிற்றப்படுகின்றனர். தொடர்ந்து சராசரியாக 3 ஆண்டுகளுக்கு 25 பேருக்குஉட்பட்ட பாலர் இரண்டு ஆசிரியர்களோடு இணைந்து ஒரு வகுப்பில் செயற்படுவர். அனேக மாக பெற்றோர் தாமாக முன்வந்து உதவியாள ராக இங்கு பணிபுரிகின்றார்கள்.

எல்லாச் சிறார்களும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல என்ற அடிப்படையே இங்கு பின்பற்றப்படுகின்றது. அவ ரவர் இயல்புகேற்ப தனித்தன்மைகளை அடையாளம் கண்டு வளர்ப்பதற்கேற்ப சூழல் உருவாக்கப்படுகின் றது. தம்மைச் சுற்றியுள்ள உலகைப் புரியத்தக்க வகையில் அறிவியல் ரீதியிலே விளையாட்டிலிருந்து படம் வரைதல் வரை வகுப்புக்கள் அமைகின்றன. சிறார்கள் கூடியிருந்து செயற்படும்போது அவர்களது பேச்சுக்கள் ஒலிப்பதிவுக்கருவி மூலம் பதிவு செய்யப் பட்டு பின்னர் ஆராயப்படுகின்றன. அதன் மூலம் அவர்கள் விருப்பு வெறுப்புக்கள் ஆராயப்படுகின்றது.

இவ்வாறான மிக முன்னேற்றகரமான டயானா பாலர் கல்விச்சாலை அமைவதற்கு இப்பகுதி கைத் தொழில் வளர்ச்சியுள்ள, பொருளாதார வசதியுள்ள பகுதியாக இருப்பதுவும் மக்கள் பெருமளவு வரிப்பணம் இதற்கு செலவிடத் தயாராக இருப்பதுமே காரண மாகும். ஏனெனில் இத்தாலியில் ஏனைய பல பாலர் பாடசாலைகள் பல அடிப்படை வசதிகளற்று இருப் பதும் இங்கு குறிப்பிடவேண்டியதுதான்.

(ஏனைய பாடசாலைகள் பற்றிய விபரங்கள் அடுத்த சாளரத்தில் வெளியாகும்.)

## கழுவ வேண்டாம்

புதிய வேலைக்காரி மீனைச் சமைத்து அதைச் சாப்பிடும் மேசையின் மேல் வைத்தாள் மீன் துண்டுகளை நன்கு கவனித்த முதலாளியம்மா, ''சமைக்கிறதற்கு முன்னால் மீனை நன்கு கழுவி னாயா? என்று கேட்டாள்.

''ஏனம்மா எப்பவும் நீருக்குள்ளேயே வாழும் மீனை எதற்காக மீண்டும் ஒருமுறை நீர்விட்டுக் கழுவ வேண்டும்?'' என்று வியப்புடன் கேட்டாள் வேலைக்காரி.

## பேசும் முட்டாள்

பேச்சாளர் ஒருவர் பேச்சைத் தொடங்கினார். அவரைப் பேசவிடாமல் கூட்டத்தில் பலர் அவர் பேச்சில் குறிக்கிட்டுப் பேசிக்கொண்டே இருந்த னர்.

பொறுமை இழந்த அவர் ''இங்கே முட்டாள் கள் பலர் இருக்கின்றோம். ஒரே சமயத்தில் ஒரே ஒரு முட்டாள் பேசினால் நன்றாக இருக்கும்'' என்றார்.

உடனே கூட்டத்திலிருந்து ஒரு குரல், ''பேச் சாளரைப் பேசவிடுங்கள்'' என்று ஒலித்தது.

# ஓவியம் வாக்கியம்



இரத ஓவியத்திற்கான வாக்கியத்தை உடனே எழுதி அனுப்புங்கள்

## அறிவுக் கூர்மையான பதில்

மனோதத்துவ டாக்டர் ஒருவர், போர் வீரனைப் பார்த்து, "உன் ஒரு காதை நான் வெட்டிவிட்டால் என்ன ஆகும்" என்று கேட்டார்.

"எனக்குக் காது கேட்காது" என்றான் போர்வீரன்.

"இன்னொரு காதையும் வெட்டிவிட்டால்?" என்றார்.

"என்னால் பார்க்க முடியாது டாக்டர்" என்றான் போர்வீரன்.

"ஏன்?" என்றார் டாக்டர்.

"என் தொப்பி என் கண்களை மறைக்கும் டாக்டர்" என்றான் போர்வீரன்.

ஓவியவாக்கியப் போட்டிகளில் பரிசு |பெற்றோர் அதற்கான பரிசுப் பொருளை சனிக்கிழமைகளில் பகல் 12 மணிக்கு முன்னதாக வந்து பெற்றுக் கொள்ளவும். நேரில் வர வசதியற்றோர் கடித மூலம் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ந**வீன நாடகம் பற்றிய விழிப்புணர்வு யாழ்ப்பாணத்தில் பரவலாகி வருகிறது; தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் நாடக முயற்சிகள் இதனைச் சாத்தியமாக்கி வருகின்றன. அரசியல் - சமூக அக்கறைகள் கலாபூர்வமாக இவற்றில் வெளிப்படுத்தப்பட்டு வருவதும் ஆரோக்கியமானதொரு நிகழ்வுப் போக்காகும். இந்த வகையில் எண்பதுகளின் நடுக்கூறிலிருந்து மேடையேற்றப்பட்டவற்றில் மண்சுமந்த மேனியர் 1 மண் சுமந்த மேனியர் - 2, மாயமான், மாற்றம், உயிர்த்த மனிதரின் கூத்து, எந்தையும் தாயும் ஆகியன மிக முக்கியமான நாடகங்களாகும். இந்த வரிசையில் அண்மையில் நிகழ்த்திக்காட்டப்பட்டதே அன்னை இட்ட தீ நாடகமாகும்.

# பேசாப் பொருளினைப் பேசும் 'அன்னை இட்ட தீ'

— அ. யேசுராசா



அரசு கொடூரமான யுத்தத்தினை தமிழீழத் தேசிய இனத்தின் மீது திணித்து வருகிறது. இதன் வெளிப்படையான பாதிப்புக்களை - உடற் பாதிப்புகள், உயிரிழப்பு, இடம் பெயர்தல், உடைமைகளின் அழிவு, பொருளாதார- மருந்துத்தடை-- என்பவற்றைப் பலரும் அறிவர். யுத்தச் சூழ்நிலையும் படைகளின் தாக்குதல்களும் மக்களின் பல தரப்பினரிடையிலும் ஏற்படுத்தும் மனோரீதியான பாதிப்புக்களை - மனப்பிறழ்வு நிலைகளைப் பற்றிய அவதானமோ, அதற்குரிய சிகிச்சையினை உடன் மேற்கொள்ள வேண்டுமென்ற அக்கறையோ, பெரும்பாலானோரிடம் இல்லை. கல்வி அறிவற்றவர்களிடையில் மட்டுமல்லாது, கற்றறிந்த பலரிடையிலும் நிலைமை இவ்வாறாகத்தான் இருக்கிறது. இந்த அவல நிலைமையின்மீது கவனத்தைக் குவித்து வெளிச்சம் பாய்ச்சுவதே, இந்த நாடகத்தின் நோக்கமாகும். உரிய அக்கறையற்ற நிலையில் மனப் பாதிப்புற்றோரின் தொகை பெருகிச் செல்லுமானால், இச்சமூகம் தான் எதிர்கொள்ள வேண்டிய மோசமான வரலாற்று நெருக்கடியை எதிர் கொள்ள முடியாது; பல துறைகளில் ஆற்றல் பெற்ற ஆரோக்கியமான சமூகமாக வளரவும் முடியாது. எனவே, இந்த நிலைமையை மாற்றும் விழிப்புணர்வு மக்களின் பலதரப்பினரிடையிலும் தோன்றுவது அவசியம். அந்த விதத்தில், பலரும 'பேசாப் பொருளினையே பேசும்' இந்த நாடகம், மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

மனப் பாதிப்பினால் கல்வியில் நாட்டமற்ற மாணவன்; இராணுவத்திடம் சிக்கி சித்திரவதைக்குள்ளான அப்பாவி இளைஞன; 1987 இல் இந்திய இராணுவம் இருந்த சூழலில், 'பாலியல் வன்முறைக்கு உளளாகலாம்' என்ற அச்சத்தில் (தன் தோழிக்கு நிகழ்ந்ததையும் அவளது தற்கொலையையும் கண்டு) மனப் பாதிப்பிற்குள்ளான இளம் பெண்; தாண்டிக்குளம் தடைமுகாமில் இராணுவத்தின் சூடுபட்ட கணவன் இறந்துவிட்டானா அலலது தப்பி இருக்கின்றானா என்பது தெரியாத 'நிச்சயமற்ற நிலையில்' தவிக்குமொரு, இளம் குடும்பப்பெண்; ஒரு மருத்துவ மாணவன் போன்ற பிரதான பாத்திரங்களுக்கூடாக, மனோரீதியிலான பாதிப்புகளிற்குரிய சிகிச்சையின் அவசியம் பற்றிய உணர்வு பார்வையாளரிடம் எழுப்பப்படுகிறது. 1977 சிங்கள இன வன்முறையில் கணவனையும், 1987இல் ஷெல் மழையில் ஒரு பிள்ளையையும், தற்போது மருமகனை இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிலும் பறிகொடுத்த ஓர் அன்னையின் துயர் - அவளது அடிவயிற்றில் மூண்ட நெருப்பு, ஒரு விதத்தில் தமிழ் இனத்தின் வரலாற்று ரீதியான துயரத்தின் குறியீடு போலவும் அமைகிறது; அந்த அன்னையின் தீ நிச்சயம் அநீதியாளரை எரிக்குமென்பதும், மறைமுகமாக வெளிப்படுகின்றது.

மனப்பாதிப்புக்களை இனங்கண்டு அதற்குரிய சிகிச்சை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தும் மருத்துவ மாணவன் நிர்மல்; இளம் குடும்பப் பெண் ஜானகி; சித்திரவதைக்குள்ளாகித் தப்பி வந்த இளைஞன் வாகீசன் ஆகிய பாத்திரங்கள், இயல்பு நிறைந்த நடிப்புச் சிறப்பினால் எம் மனதில் ஆழமாகப் பதிகின்றன. ஏனைய நடிகரும் தத்தம் பங்கைச் சிறப்பாகச் செய்கின்றனர். ஆயினும், 'அன்னை'யாக வந்தவரின் நடிப்பில்மிகையுணர்ச்சி வெளிப்படுவதுகுறைபாடாகும்.

(31ஆம் பக்கம் பார்க்க)

# அண்டகோளங்களை மனிதன் ஆள்வானா?

மனிதனின் கவனம் அண்டவெளிக்குத் திரும்பியுள்ள யுகம் இது. வரப்போகும் நூற்றாண்டுகள் மனிதன் அண்டவெளியைப் பங்குபோடப் போகும் காலம். 15 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் தமது வாழ்வுக்கான வளத்தைத்தேடி புதிய கண்டங்களைக் கண்டுபிடிக்கத் தொடங்கிய காலம். இன்றைய அண்டவெளிப் பயணங்களை விடவும் அபாயகரமானதாய், துணிகரம் மிக்கக் கடல்வழிக் கண்டுபிடிப்புக்களில் ஈடுபட்ட காலமது.

கடல்வழிக் கண்டுபிடிப்புக்களையும், புதிய கண்டங்களைக் கண்டுபிடித்தமையையும் தொடர்ந்து மனிதன் பூமியைத் தனக்கிடையிற் பங்குபோட்டுக் கொண்டான். இவ்வாறு பூமியின் வளங்கள் பங்குபோடப்பட்டதைத் தொடர்ந்து பூமிக்கு வெளியே அண்டகோளங்களில் உள்ள வளங்களைப் பற்றிச் சிந்திக்கலானான். இதனால் அண்டவெளி ஆய்வுகளை நோக்கி மனிதன் தனது சக்தியைத் திருப்பலானான். இதன் விளைவாக மனிதன் சந்திரனில் கால்வைக்கலானான்.

சோவியத் யூனியன் இயந்திரத்தை சந்திரனுக்கு ஏவி அதன் மூலம் சந்திரனில் இருந்து முதலில் மண்ணை அள்ளி வந்தது. அமெரிக்கா போட்டியாக மனிதனை 1969 ஆம் ஆண்டு சந்திரனுக்கு அனுப்பி சந்திரனிலிருந்து மண்ணை அள்ளிவந்தது. மனிதனுக்குத் தேவையான வளங்கள் சந்திரனில் இல்லை என்பதை இவ்வாய்வுகள் உறுதிப்படுத்தின. ஆனால் சந்திரனிற் கருவிகளைப் பொருத்தி ஏனைய கிரகங்களை ஆய்வு செய்வதற்கான ஒரு தளமாகப் பயன்படுத்தலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

செவ்வாய் வியாழன் போன்ற கிரகங்கள் பற்றிய ஆய்வில் இந்நாடுகள் ஈடுபடலாயின. அங்குள்ள வளங்கள் பற்றிய சாதகமான முடிவுகளுக்கு இந்நாடுகள் இன்னும் வந்துசேரவில்லை. அண்டகோளங்களிலிருந்து வளங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அடுத்த நூற்றாண்டின் மத்திவரை சாத்தியமானதாய்த் தெரியவில்லை. இம்முயற்சிக்கான செலவுகளும் பெருந் தொகையானவை. அத்துடன் சோவியத் யூனியனினது வீழ்ச்சியைத் தொடர்ந்து அண்டகோளக் கண்டுபிடிப்பிற்கான போட்டி தணிந்துள்ளது.

இப்போது அண்டவெளி ஆய்வு வேறொரு முனையில் முனைப்புப் பெற்றுள்ளது. பூமியில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு அண்டவெளியை எப்படிப் பயன்படுத்துவது என்பதே அதுவாகும்.

அண்டவெளி இப்போது வேவு பார்க்கும் செய்மதிகளினாலும், மற்றும் இராணுவ நோக்கங்களைக் கொண்ட செய்மதிகளினாலும் நிரம்பத் தொடங்கியுள்ளது. இவற்றுள் ஒன்றே அமெரிக்காவின் அண்டவெளி நட்சத்திரப் போர்த் திட்டமாகும். இவற்றைவிடவும் வேறுபல ஆக்கபூர்வமான பணிகளுக்கும் அண்டவெளி ஆய்வுகள் பயன்படுகின்றன. பூமியைக் கற்றறிதல் மற்றும், தொலைதொடர்புக்கான செய்மதிகள் உலா வருதலை இத்தகைய ஆக்கபூர்வ பணிகளுக்கு உதாரணமாய்க் கூறலாம். இவ்வாறு பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மனிதனின் கவனம் அண்டவெளியை நோக்கிப் பெரிதும் திரும்பும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய நிலையில் அண்டவெளியில் அதிக ஆர்வம் காட்டும் நாடுகளாக அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா என்பன உள்ளன. இன்றைய நிலையில் அண்டவெளிக்குள் பிரவேசிக்கும் புதிய ஆர்வலராக இந்தியாவைக் கூறலாம். சோவியத் யூனியனது வீழ்ச்சியைத் தொடர்ந்து அதன் தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் முனைப்பில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இந்தியாவின் இத்தகைய பிரவேசம் அமெரிக்காவின் இன்றைய முதன்மையை எதிர்காலத்திற் பாதித்து விடுமென அமெரிக்கா அஞ்சுகின்றது. எவ்வாறாயினும் எதிர்கால மனிதனின் தலைவிதியை அண்டவெளி யுகமே நிர்ணயிக்கப்போகிறதுஎன்பதில் சந்தேகமில்லை. "கடலை ஆள்பவன் தரையை ஆள்வான்" இக்கோட்பாடு மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் உண்மையாய் இருந்தது. இனி அண்டவெளியை ஆள்பவன் பூமியை ஆள்வான் எனும் கோட்பாடு நடைமுறைக்கு வருமோ?

---

## பேசாப் பொருளினை...

(30ம் பக்கத் தொடர்)

நாடக நிகழ்வுகளோடு ஒன்றிச் செல்வதற்கு, அதிற் கையாளப்பட்ட பாடல்களும் பின்னிசையும் நன்கு துணை செய்கின்றன; இசையமைப்பாளர் கண்ணன பாராட்டுக்குரியவர்.

இக்காலச் சூழ் நிலையில் முக்கியம் வாய்ந்ததொரு பிரச்சினையை மையமாக்கி, சமூகப்பொறுப்புணர்வுடன் - கருத்து நிலையில் அரசியற் பிறழ்வு ஏதும் ஏற்படாமல் - நாடகப் பிரதியை எழுதி, நவீன அரங்கியல் அம்சங்கள் பேணி, சிறந்த கலைப்படைப்பாக அதனை உருவாக்கி மேடையில் அளித்த குழந்தை ம. சண்முகலிங்கம், மதிப்புடன் பாராட்டப்பட வேண்டியவர்.

அவருடன் இம்முயற்சியிலீடுபட்டு உழைத்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் குழுவிற்கு அன்பானதொரு வேண்டுகோள்: "யாழ்ப்பாணத்தில் ஐந்து தடவைகள் மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்தை, ஏனைய இடங்களிலும் மேடையேற்றுங்கள்; அப்படியானால் தான் நாடகத்தின் சமூகப்பயன்பாடு நடைமுறையில் அர்த்தமுள்ளதாகும்.

# சாளரம் முதலாமாண்டுச் சிறப்பிதழ்


சாளரம்

கதவு 2
காற்றலை 07 (13)



சாளரம்:
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.


**1991**ம் ஆண்டு யூன் திங்கள் முதலாவது சாளரம் வெளிவந்தது. இது 13வது இதழாகும்.

சமூகம் பற்றியும், கல்வி பற்றியும், இவ்வுலகம் பற்றியும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே சாளரத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக இளையோர், மாணவர்களிடையே இவ்விழிப்புணர்வு ஏற்படவேண்டும்.

நாம் மேற்குலக நாடுகளின், எண்ணங்களை, கருத்துக்களை பெருமளவில் தெரிந்து வைத்திருக்கிறோம். அதேவேளை, எம்மைப்பற்றியும் எமது சமூகம் பற்றியும் எதுவும் தெரியாமல் இருக்கின்றோம்.

எமது கல்வி முறையில் இருக்கின்ற குறைபாட்டினால் எம்மால் சரியாக விடயங்களை பகுத்தறிய முடிவதில்லை.

மேற்குலகத்தை உயர்வாகவும், எம்மைத் தாழ்வாகவும் பார்க்க இதுவே காரணமாயிற்று.

மேற்குலகநீதி, செயற்பாடு எல்லாமே அவர்களின் நலன்கருதியே செயற்படும்.

எமது சமூகத்தை, எமது மண்ணை நாம் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் வளர்ச்சியடைய முடியாது.

காலங்காலமாக எம்மனதில் திணிக்கப்பட்ட பல பிழையான கருத்துக்களை ஒரு ஆண்டுக்குள் - 24 பக்கங்களைக் கொண்டு வெளிவரும் சாளரத்தினால் மாற்றிவிடமுடியாது.

ஆயினும், இளையோர் மனங்களில் விழிப்புணர்வு பற்றிய மெல்லியதோர் அதிர்வினை சாளரம் ஏற்படுத்தியுள்ளது என நம்புகிறோம்.

இதுவரை வெளிவந்த 12 இதழ்களும் எந்தவிதத்தில் பயன்பட்டன என்பதை வாசகர்களாகிய நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

ஆசிரியர்குழு என்ற வகையில் நாம் ஓரளவிற்கு திருப்தி அடைந்திருக்கிறோம்.

இந்த 13 வது இதழ் சிறப்பிதழாக 32 பக்கங்களைக் கொண்டு வெளிவருகின்றது.

இதன் வளர்ச்சிக்கு தொடர்ந்தும், நீங்கள் கடந்த ஆண்டிற்கு மேலாக பங்காற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்றும் - இன்றும் - என்றும்

மக்களின் நன்மதிப்பைப்பெற்ற
ஸ்தாபனம்

**மளிகைச் சாமான்கள்**
**சாய்ப்புச் சாமான்கள்**
**மரக்கறி வகைகள்**

அனைத்தும் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**தரமான பொருட்கள்! நியாயமான விலைகள்!**

# பொ. சுந்தரலிங்கம் ஸ்ரோர்ஸ்

**வல்லை வீதி, — சங்கானை.**

ஆனைக்கோட்டையில்...

உங்கள் தேவைகளை தாமதமின்றி
பூர்த்தி செய்து கொள்ளலாம்!

- தூள் அரைத்தல்
- நெல் உடைத்தல்
- மாவு அரைத்தல்
- அரிசி தீட்டுதல்

அனைத்தையும் மலிவான விலையில்
செய்து கொள்ள நாடுங்கள்!

# பரமநாதன் கிறைண்டிங் மில்

கூழாவடி – மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.